பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 05 வியாழக்கிழமை 18.02.2021 கதிர் 105

### இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் தனியார் வங்கிக் கணக்குக்கு பல்லாயிரம் கோடி ரூபா கனடாவிலிருந்து வந்திருப்பது குறித்தும் – மத்திய வங்கி

பக்கம்02 »

## மேலும் 13 பேரைப் பலியெடுத்த கொரோனா; நேற்றும் 713 பேர் தொற்றுடன் கண்டுபிடிப்பு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்துநாட்டில்கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 422 ஆக உயர்வடைந்துள்ளது என சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றும் 713 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 77 ஆயிரத்து 906 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் 747 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமையநாட்டில்கொரோனாத் தொற்றில்

2

## 17 நாள்களில் 99 பேர் சாவு!

இலங்கையில் கொரோனா வைரஸால் கடந்துள்ள 17 நாள்களில் மாத்திரம் 99 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் கடந்த ஒக்டோபர் 4ஆம் திகதி முதல்

2

## திருகோணமலையில் 7 மீனவரைக் காணோம்

திருகோணமலைதுறைமுகத்திலிருந்து கடற்றொழிலுக்காக சென்ற – ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களான – ஏழு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சாகர குமார – 4' என்ற நெடுநாள் படகில்,

11

# புதிய ஆடையில் பழைய பேய்கள்!

## கோட்டா அரசைக் கடுமையாகச் சாடி சர்வதேச மன்னிப்புச் சபை விசனம்

இலங்கையில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியின் அடக்குமுறைப் போக்கைக் கடுமையாக விமர்சித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை 'மீண்டும் அச்சத்திற்குள் இலங்கை: புதிய ஆடையில் பழைய பேய்கள்' (Old ghosts in new garb: Srilanka return to fear) என அந்த ஆட்சியை குறிப்பிட்டுள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் எடுக்கப்படுவதை ஒட்டி இந்த அறிக்கையை மன்னிப்புச் சபையின் கொழும்பில் உள்ள தென்னாசிய அலுவலகம் வெளியிட்டுள்ளது.

(அதன் முழு விவரம் 08ஆம் பக்கத்தில்)

## ஊறணி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு கொழும்பு வீதி ஊறணி சந்தியில் நேற்றுக் காலையில் பெக்கோ இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் உயிரிழந்தமையுடன் அதில் பின்னால் இருந்து வந்த பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

அம்பாறை கல்முனைக்குடி 9 ஆம் பிரிவு வீட்டுத்திட்ட

2

## கொரோனாவால் பேராதனையில் 4 மாத சிசு சாவு

பேராதனை – பண்டாரநாயக்க குழந்தைகள் மருத்துவமனையில்சிகிச்சைபெற்றுவந்தநான்கு மாத பெண் குழந்தை கொரோனாவால் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குழந்தைக்கு செய்யப்பட்ட பிரேத பரிசோதனை போது கொரோனா வைரஸ் தொற்று இருப்பது

2

## மேலும் நான்கு பேருக்கு வடக்கில் தொற்றுறுதி

வடக்கு மாகாணத்தில் மேலும் 4 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதியாகியுள்ளது.

அவர்களில் ஒருவர் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் என்றும் மற்றைய மூவரும் பூநகரியைச் சேர்ந்தவர்கள் என்றும் மாகாண

2

## கோட்டாபயவின் கொடூரங்கள் தொடரும் வரை சிறுபான்மை இனங்களின் ஒற்றுமை நீடிக்கும்!

### யாழ்.வந்த சுவிஸ் தூதுவரிடம் விக்கி எடுத்துரைப்பு



2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சுனாமி வந்தபோது உக்கிரமாகப் போரில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவமும் விடுதலைப்புலிகளும் மனிதாபிமான முறையில் ஒன்று சேர்ந்து உதவி செய்தார்கள். அதேபோன்று இன்று தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர், கத்தோலிக்கர்கள் போன்ற அனைவரும் இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தவறான

2

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபேர்கலர், நல்லை ஆதீன குரு முதல்வர் ஞானதேசிக சோமசுந்தர பரமச்சாரிய சுவாமியையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் பிரபல ஆன்மீக சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனும் உடனிருந்தார்.



## செட்டிகுளத்தில் சிக்கின 2 தற்கொலை அங்கிகள்

### பொலிஸார் தீவிர விசாரணை



செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய தம்பனைக் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு தற்கொலைஅங்கிகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

குறித்த விடயம் தொடர்பாக கொழும்பில்

2

## பிரிட்டனில் இருந்து விமானங்கள் வருவதற்கான தடை நீக்கப்பட்டது

### வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

பிரிட்டனில் இருந்து இலங்கைக்கு விமானங்கள் வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று மாலை முதல் நீக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் புதிய வகை கொரோனா பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து கடந்த டிசம்பர் 22ஆம் திகதி முதல் அங்கிருந்து வரும் அனைத்து விமானங்களுக்கும் இலங்கையில் தரையிறக்க சிவில் விமான

2

## திருகோணமலையிலுள்ள எரிபொருள் தாங்கி இந்தியாவிடமிருந்து விரைவில் இலங்கை வசம்

### அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு

திருகோணமலையில் உள்ள எரிபொருள் தாங்கிகள் வெகு விரை வில் இந்தியாவிடமிருந்து இலங்கை வசமாக்கப்படும். இவ் விடயம் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதுவருடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பேச்சு வெற்றியளித்துள்ளது.

எரிபொருள் தாங்கி குறித்து 2017ஆம் ஆண்டுசெய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

– இவ்வாறு சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொலன்னாவைப் பகுதியில் நேற்று நடைபெற்ற

11

## இரு தரப்பினரும் நன்மையடையும் வகையில் தீர்வு

### இந்தியத் தூதரகம் அறிவிப்பு

இந்தியாவும் இலங்கையும் இணைந்து இரு தரப்பும் நன்மையடையும் வகையில், திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்ய இந்தியா தயாராகவுள்ளது என இலங்கைக்கான இந்தியத்

11

## நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்து; ஒருவர் படுகாயம்

### வவுனியாவில் நேற்று சம்பவம்



வவுனியா – கண்டி வீதியில் வன்னி இராணுவத் தலைமையகத்துக்கு அருகே நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில்

2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யினால் அந்நிதி முடக்கப்படுள்ள நிலையில், அதைத் தனது வங்கிக் கணக்குக்கு மாற்றுவிக்க அந்த இளைஞர் தரப்பில் முயற்சி எடுக்கப்படுவது குறித்தும் –

இரண்டு தினங்களுக்கு முன்னர் இப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இந்த விவகாரத்தை ஒட்டி நேற்று (புதன்கிழமை) ஏதேனும் அதிரடி நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் என் எதிர்பார்ப்பை வெளியிட்டிருந்தேன். நான் ஹேஸ்யம் கூறியபடி நேற்று அதிரடி நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி நிதியை அவரது வங்கிக் கணக்கில் வரவிட வைத்து, அதை அவருக்குக் கிட்டச் செய்வதாகத் தெரிவித்து, அதற்குத் தமக்குப் பெரும் தொகை வீதத்தை தரகுக் கூலியாகத் தர வேண்டும் என்று பல தரப்புகள் இந்த இளைஞரை வட்டமிட்டன எனவும் தகவல்.

மத்திய வங்கி அறிவுறுத்தல்படி தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக தனது கிராம சேவையாளரையும் பிரதேச செயலாளரையும் அந்த இளைஞரும், அவரைச் சுற்றி வட்டமிடும் தரப்பு ஒன்றும் சந்தித்தமை குறித்தும் கோடிகாட்டியிருந்தேன்.

பல தரப்புகளின் தொல்லைகளுக்கும் ஈடு கொடுக்க முடியாத அந்த இளைஞன் வவுனியாவில் கூமாங்குளம் பகுதியில் போய் ஒளித்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

அவரைத் தேடி மோப்பம் பிடித்த ஒரு குழு நேற்று முன்தினம் கூமாங்குளத்தில் அவரை மடக்கியுள்ளது.

மூன்று கார்களில் வந்த அக்குழுவினரின் வற்புறுத்தலினால் அந்த இளைஞர்வேறுவழியின்றி அவர்களுடன் நேற்று கொழும்புக்குச் செல்ல இணங்கினார்.

வந்த குழுவினர் மூன்று கார்களில் அந்த இளைஞருடன் கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர். சம்பந்தப்பட்ட இளைஞர் தந்திரமாகப் பேசி ஒரு வாகனத்தைத் தானே சாரதியாகச் செலுத்தியிருக்கின்றார்.

வவுனியா நெலுக்குளம் பகுதியில் உள்ள பொலிஸ் தடை நிலையத்தை வாகனம் நெருங்கிய போது இளைஞர் சடாரெனக் காரைத் தடை நிலையத்துக்கு அருகில் நிறுத்தி விட்டு தடை நிலையப் பொலிஸாரிடம் சரணடைந்தாராம். அவரது முறைப்பாட்டை அடுத்து அவர் செலுத்திய காரிலும் அந்தக் காருடன் மற்றொரு காரில் வந்தவர்களுமாக மொத்தம் ஐந்து பேர் தடை நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். மூன்றாவது கார் தப்பி விட்டது.

தன்னைக் கொழும்புக்குக் கடத்திச் சென்று தீங்கிழைக்க இக்குழுவினர் முயற்சிக்கின்றனர் என்று அந்த இளைஞன் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட ஐவரும் வவுனியா நீதிவான் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மூன்றாவது காரில் வந்த பிரமுகர்கள் யார் என்பது வெளியாகவில்லை. அவர்கள் நழுவி விட்டனர்.

அவர்கள் சிக்கினால் இந்தப் பணச் சலவை விவகாரத்தின் மேலதிக விடயங்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போது கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு, அவிசாவளை, குருநாகல், வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் ஐவரும் மேற்படி இளைஞனைக் கடத்த முற்பட்ட முறைப்பாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து வந்த பல்லாயிரம் கோடி ரூபா விவகாரம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு தொகைப் பணம் தனி ஒருவரின் வங்கிக் கணக்குக்கு வந்தமை தொடர்பாக அரசும் அதிகாரிகளும் அதீத மௌனம் சாதிக்கின்றமை பல பக்கங்களிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

– மின்னல் –

## மேலும் 13 பேரைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து இது வரை 72 ஆயிரத்து 178 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 321பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## கோட்டாபயவின் கொடூர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடிவுகளால் ஒன்றிணைகின்றார்கள். அவரின் பிழையான செயற்பாடு தொடரும் வரையில் வடக்கும் கிழக்கும் மலையகமும் ஒன்று சேரும். அரசின் நடவடிக்கைகளிலேதான் எமது ஐக்கியம் தங்கியிருக்கின்றது.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபேர்கலர் நேற்று விக்னேஸ்வரனை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசினார். இதன்போதே மேற்படி கருத்தை விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சந்திப்பு முடிவடைந்த பின்னர் விக்னேஸ்வரன் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் –

இன்று (நேற்று) இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபேர்கலருடன் முதற் செயலாளர், அரசியல், சிடோனியா கேபிரியல் அத்துடன் நிகழ்ச்சிகள் இணைப்பாளர் சுசந்தி கோபாலகிருஷ்ணன் மூவரும் என்னை வந்து சந்தித்தார்கள்.

புதிய சுவிஸ் தூதுவரின் வடக்கை நோக்கிய முதற் பயணம் இதுவாகும். வவுனியாவில் தரித்து நின்று, இன்று (நேற்று) மாலை இங்கு வந்து என்னைச் சந்தித்த பின்னர் நல்லூர்க் கந்தனைத் தரிசிக்கச் செல்கின்றார்கள்.

எங்களுடைய சரித்திரம் பற்றியும் தற்கால பிரச்சினைகள் பற்றியும் பல கேள்விகளை அவர் கேட்டிருந்தார். முக்கியமாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்களின் எழுச்சிப் பவனி சகலரையும் ஒன்று சேர்த்தது என்று கூறி இவ்வாறான ஒற்றுமை வருங்காலத்தில் நிலைக்குமா என்று கேட்டார். அதற்குப் பதில் அளித்த நான் 2004 டிசம்பர் மாதத்தில் சுனாமி வந்தபோது உக்கிரமாகப் போரில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவமும் விடுதலைப்புலிகளும் மனிதாபிமான முறையில் ஒன்று சேர்ந்து, பாதிப்புக்குள்ளான மக்களுக்கு மூன்று நாள்கள் வரையில் உதவி செய்தார்கள். அதேபோன்று இன்று தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர், கத்தோலிக்கர்கள் போன்ற அனைவரும் இன்றைய ஜனாதிபதியின் தவறான முடிவுகளால் – கொள்கைகளால் – பாதிப்புற்றிருக்கின்றார்கள்.

சிறுபான்மையினர் அனைவருக்கும் எதிராக சிங்கள, பௌத்தம் என்ற ஆயுதத்தை ஓய்வுபெற்ற இராணுவத்தினருடனும் சேவையில் இருக்கும் படையணியினருடனும் சேர்ந்து பிரயோகிக்கும் போது பாதிப்புறும் சகல மக்களும் ஒன்றிணைகின்றார்கள். தற்போதைய ஐக்கியம் அரசின் பிழையான செயற்பாடுகளால் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. அவர்களின் பிழையான செயற்பாடு தொடரும் வரையில் வடக்கும் கிழக்கும் மலையகமும் சேர்வன. தமிழரும் முஸ்லிம்களும் சேர்வர். வடக்கும் கிழக்கும் இணைவன. ஆகவே, அரசின் நடவடிக்கைகளிலேதான் எமது ஐக்கியம் தங்கியிருக்கின்றது என்றேன்.

உங்கள் அரசியல் கட்சிகள் பலவாகப் பிரிந்து நிற்கும்போது அவர்கள் இடையே ஓர் ஒற்றுமையை ஏற்படுத்த முடியுமா என்று கேட்டார். அதற்கு நான் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் தங்கள் தங்களது கொள்கைகள் சம்பந்தமாகப் பூரண புரிதல் ஏற்பட்டால் முடியும் என்றேன். அதன் அர்த்தம் என்ன என்று கேட்டார். தமிழ் மக்கள் வாக்காளர்களும் கட்சிகள் இரண்டு முக்கியமான பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றன. ஒரு சாரார் தமிழ் மக்களின் வருங்காலத்தைப் பற்றிய சிந்தனையில் தமது கொள்கைகளை வகுத்திருக்கின்றார்கள். மறு சாரார் அரசிடம் இருந்து இன்று எதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலையில் செயற்படுகின்றார்கள்.

பறங்கியர்களுக்கு நடந்தது போன்று அரசின் தற்போதைய செயற்பாடுகள் வருங்காலத்தில் தமிழ் மக்களின் தொகையையும் வதிவையும் குறைத்துக் குறைத்து வடக்கு, கிழக்கை பௌத்த, சிங்கள மயமாக்கக் கூடும் என்ற பயத்திலேயே ஒரு சாரார் தமது அரசியலை நடத்துகின்றார்கள். மறுசாரார் பின்னர் என்ன நடந்தாலும் எமக்குக் கவலையில்லை, இன்று எமது மக்கள் குனிந்து, பணிந்தேனும் அரசிடமிருந்து எதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சிந்தனையிலேயே அரசியல் நடத்துகின்றார்கள். பின்னையோர் வருங்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். முன்னையவர்கள் நிகழ்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். அரசியல் தீர்வும் பொருளாதார அபிவிருத்தியும் தேவை என்று இருசாராரும் பயணிக்க வேண்டும். இவற்றை விட தனிப்பட்ட ரீதியிலே அரசியல் பிரமுகர்கள் இடையில் கோபதாபங்கள் மற்றும் முரண்பாடுகள் இருப்பதையும் அவதானிக்கலாம். புரிந்துணர்வு ஏற்பட்டால் எமது கட்சிகள் யாவும் ஒருமித்து செயல்பட முடியுமென்றே நான் கருதுகின்றேன்.

பொது வாக்கெடுப்பை வேண்டி உங்களுடைய கட்சி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தது. அவ்வாறெனின் என்னவாறான கேள்விகளை நீங்கள் பொது வாக்கெடுப்பின்போது மக்களிடம் கேட்கப் போகின்றீர்கள் என்று கேட்டார். முதலிலே பொது வாக்கெடுப்புக்கு ஐ.நா. அனுமதியைத் தரட்டும், கேள்விகளைப் பின்னர் பார்க்கலாம் என்றேன். பல சிங்கள புத்திஜீவிகள் இந்தப் பொது வாக்கெடுப்பின் மூலமாக தமிழ்த் தலைவர்கள் நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார்கள் என்றும், பிரிவினைக்கு வித்திடுவதற்கே பொது வாக்கெடுப்பை தமிழ் அரசியல்வாதிகள் கோருகின்றார்கள் என்று நினைக்கின்றார்கள் என்று கூறினார். அதற்குப் பதிலளித்த நான் ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டியா என்று கேள்விகளை நாம் முன்வைத்தால் ஒற்றையாட்சியா? பிரிவினையா? என்ற கேள்விக்கு இடமில்லை அல்லவா என்று நான் கேட்டேன்.

தமிழ் மக்களின் பாரம்பரியம் பற்றியும் சிங்கள பௌத்த மயமாக்குதல் பற்றியும் பல விடயங்களை நாங்கள் பேசிக்கொண்டோம். திரும்பவும் வந்து சந்திப்பதாகக் கூறி அவர்கள் விடைபெற்றார்கள்.

ஒரு நகைச்சுவை நிகழ்வும் நடந்தது. பழக்கத்தின் நிமித்தம் நான் தூதுவருக்குக் கைலாகு கொடுத்தபோது அவர் தமது இரு கைகளையும் கூப்பி வணக்கம் தெரிவித்தார். அப்போது நான் நீங்கள் வணக்கத்துக்காக கிழக்கு முறையைத் தற்போது பின்பற்றத் தொடங்கி விட்டீர்கள். நாங்கள் இன்னமும் மேற்கிடம் இருந்து படித்தவற்றை வைத்துக் கொண்டிருக்கின்றோம் என்று கூறினேன். கொரோனாவால் ஏற்பட்ட மாற்றம் இது என்றார் தூதுவர் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரிட்டனில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேவைகள் அதிகார சபையினால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று நடைபெற்ற கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான விசேட கூட்டத்தில், பிரிட்டனில் இருந்து விமானங்கள் வருவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அந்தத் தடையை நீக்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

சுகாதார நடைமுறைகளுக்கமைய பிரிட்டனில் இருந்து வரும் அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், பி.சி.ஆர். பரிசோதனைகளையும் செய்து கொள்ள வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## நான்கு வாகனங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து கண்டி வீதியூடாகத் தென்பகுதி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியின் மறுபக்கம் திரும்ப முற்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் வீதியின் மறுபக்கம் திரும்புவதை அவதானித்த மோட்டார் சைக்கிளின் பின் தொடர்ந்து வந்த ஹயஸ் வாகனமும், பாரவூர்தியும் சடார் என தரித்து நின்றுள்ளன.

இதன்போது பாரவூர்தியின் பின் தொடர்ந்து வந்த பட்டா ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பாரவூர்தியின் பின் பகுதியில் மோதியது. உடனே பாரவூர்தி, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஹயஸ் வாகனத்துடன் மோதுண்டதுடன் ஹயஸ் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பட்டா ரக வாகனம், பாரவூர்தி, ஹயஸ், மோட்டார் சைக்கிள் ஆகிய நான்கு வாகனங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியாப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (100)

## 17 நாள்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று வரை 409 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

கொரோனாவின் முதலாம், இரண்டாம் அலைகளின்போது 13 பேர் மாத்திரமே உயிரிழந்தனர். இதன்படி கொரோனாவால் இதுவரை மொத்தமாக 422 பேர் உயிரிழந்துள்ளனர்.

## ஊறணி விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீதியைச் சேர்ந்த 63 வயதுடைய இராசதம்பி முஹமட் பஸில் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள் ளார்.

இவர் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் ஏறாவூரில் இருந்து மட்டக்களப்பு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த போது ஊறணியில் இருந்து திருப்பெருந்துறை நோக்கி பயணித்த பெக்கோ இயந்திரத்தில் அது மோதி விபத்துக்குள் ளானது.

இதில் மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்த இவரும் பின்னாலிருந்த பெண்ணும் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து, படுகாயமடைந்தவர்களை மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் படுகாயமடைந்த 63 வயதுடைய முஹமட் பஸில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பில் பெக்கோ இயந்திரத்தை செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டார். இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## செட்டிக்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து செட்டிகுளம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் ஆகியோர் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட இரண்டு துப்பாக்கிகளை மீட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக பல்வேறு கோணங்களில் பொலிஸாரால் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## மேலும் நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட 491பேரின் பி.சி.ஆர். பரிசோதனையிலேயே ஒருவருக்கு தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது.

இதேவேளை போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட 447 பேரின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் 3 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி குறித்த பெண் குழந்தைக்கு 4 மாத ஊசி போடப்பட்டுள்ளது.

இதையடுத்து குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் பண்டாரநாயக்க குழந்தைகள் மருத்துவமனையில் குழந்தை அனுமதிக்கப்பட்டது.

அதன் பின் குழந்தை உயிரிழந்துள்ளது. இதன்போது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் கொரோனா தொற்று உள்ளமை உறுதியாகி உள்ளது.

கண்டி – நுகவெல பகுதியைச் சேர்ந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் உயிர்த்த ஞாயிறு அறிக்கை நாடாளுமன்றுக்கு!

## உதய கம்மன்பில உத்தரவாதம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை விசேட அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சரவை இணை பேச்சாளர் உதய கம்மன்பில, தற்போது பிரதி எடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை இணையவழியூடாக நடைபெற்றது.

இதன் போது –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் கோரியுள்ளனர்.

இதன் பிரதிகளை அவர்களுக்கு வழங்குவதில் ஏன் கால தாமதம் ஏற்படுகிறது? என்று கேட்ட போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில் –

குறித்த அறிக்கையை அவர்களிடம் கையளிப்பதற்கு கால தாமதம் ஏற்படும். ஏதேனுமொரு ஜனாதிபதி ஆணைக்குழு அதன் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்குமாயின் அது முதலில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் நாடாளுமன்றத்திலும், இறுதியாக ஏனையோருக்கும் வழங்கப்படும்.

தற்போது அமைச்சரவையில் 27 அமைச்சர்கள் உள்ளனர். அவர்களுக்கான பிரதிகளை எடுக்கும் செயற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பான விசேட அமைச்சரவை கூட்டம் எப்போது நடைபெறும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ கேள்வியெழுப்பிய போது , பிரதிகள் தயாரான பின்னர் விசேட அமைச்சரவை கூட்டம் நடைபெறும் என்று ஜனாதிபதி பதிலளித்தார்.

# சர்வதேச ரீதியில் நாடுசார்ந்து ஒரே குரலில் ஒன்றுபடவேண்டும்!

## அமைச்சர் தினேஷ் குணவர்தன கோரிக்கை



சர்வதேச அளவில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும்போது அனைவரும்ஒரேகுரலில் ஒன்றுபட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர்தினேஷ்குணவர்தன வலியுறுத்தினார்.

வெளிவிவகார அமைச்சகத்துக்கான ஆலோசனைக் குழுவில் உரையாற்றிய அமைச்சர், இலங்கையின் அண்டை நாடான இந்தியா உட்பட பல நாடுகள், உள்நாட்டில் வேறுபாடுகள் இருந்தபோதிலும் சர்வதேச தளங்களில் இருக்கும் போது ஒரே குரலில் தங்கள் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையை சர்வதேச அளவில் ஒரே தேசமாக பிரதிநிதித்துவப்படுத்துவதில் அனைத்து கட்சிகளும் ஒன்றுபடும் என்று அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு அனுமதிப்பத்திரங்கள் விநியோகம்!

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் தபால் மூலம் நேற்று (புதன்கிழமை) அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மற்றும் ஸ்ரீஜயவர்தனபுர கல்வி வலயங்களின் பாடசாலை அதிபர்கள், பரீட்சைகள் திணைக்களத்துக்கு வருகை தந்து அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி.பூஜித தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப் பத்திரங்களும் நேற்று தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன..

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை 4,513 மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இம்முறை நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 622,352 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீட்டுத் திட்டத்துக்கான முழுமையான நிதியை வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்!

## யாழில் ஆளுநர் செயலகம் முன் நடந்தது



வீட்டுத்திட்டத்துக்கான மீதிபணத்தைப் பெற்றுத்தருமாறு கோரி சண்டிலிப்பாய் பெரியவிளான் மக்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலக முன்றிலில் நேற்று (புதன்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரிய விளான் 3 ஆம் வட்டாரம் ஜே 153 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மக்களுக்கு ஏழு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியிலான வீட்டுத்திட்டம் கடந்த அரசால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

படிப்படியாக வீட்டுத்திட்ட வேலைகள் முடிக்கும் பட்சத்தில் கட்டம் கட்டமாக பணம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. பின்னர் எந்த கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.அதன் பின்னர் நிதி நிறுவனங்களிடம் கடன்பட்டு வீட்டு வேலைகள் செய்தும் முழுமையாக செய்து முடிக்க முடியவில்லை.

பெற்ற கடனை திரும்ப செலுத்த முடியாமலும் வீட்டை முழுமையாக்காமலும் நிர்க்கதியில் இருப்பதாக தெரிவித்த மக்கள் தாம் பெரும் மன உழைச்சலுக்குள்ளாகியுள்ளனர் எனவும் குறிப்பிட்டனர்.

எனவே இந்த வீட்டுத்திட்டத்துக்கான மிகுதிப் பணத்தை மிக விரைவில் பெற்றுதர ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்




# நற்சமூகம் மலர நாமே தூதுவராவோம்

இன்று ஆன்மீக தேடல் அருகி வருவது நாட்டுச் சூழலால் மட்டுமல்ல நமது அலட்சிய போக்குகளும், எல்லையற்ற பேராசைகளுமே காரணம் என்பதனை காண்கின்றோம். இவை போலிகளாக மாற்றப்படுவதால் முன்மாதிரியான வழிகாட்டலை வெளிப்படுத்தி நல்வழிப்படுத்தலே இவ் தவக்காலம் அழைப்பு விடுக்கின்றது.

"உன் மேல் இன்று நான் விண்ணையும் மண்ணையும் சான்றாக அழைத்து, வாழ்வையும் சாவையும் ஆசியையும் சாபத்தையும் உனக்கு முன் வைக்கின்றேன். நீயும் உன் வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வை தேர்ந்துகொள். உன்கடவுளாகிய ஆண்டவர் மீது அன்பு பாராட்டு; அவரது குரலுக்கு செவிகொடு; அவரையே பற்றிக் கொள், ஏனெனில் அவரே உனது வாழ்வு. ஏனெனில் அவரே உன் நீடிய வாழ்வு" என்கிறார் நற்செய்தியில்.

இன்றைய காலத்தில் நாம் தேட வேண்டியதும் வழி காட்ட வேண்டியதும் எமது சந்ததி நம்பிக்கை வாழ்வோடு நற்சமூகம் மலர நாம் ஒவ்வொரு வரும் இறைவனின் தூதுவராக மாறவே அழைக்கப்படுகிறோம். "ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கி கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன?" என்ற வார்த்தையை எம் வாழ்வோடு மீட்டுப் பார்க்கும் காலமாக தவக்காலப் பயணத்தில் இணைந்து பயணிப்போம். இதுவே இறைவனோடு சங்கமமாகும் காலமாகும்.

# யுத்த காலத்தில் நிறுத்தப்படாத அபிவிருத்தி கோவிட் காலத்திலும் நிறுத்தப்பட மாட்டாது!

## பிரதமர் மஹிந்த உறுதி



யுத்தத்தின்போது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடையின்றி தொடர்ந்தமையைப் போலவே கொவிட் தொற்று நோயையும் எதிர்கொண்டு நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடையின்றி தொடரும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டார்.

வடமேல் மாகாண கால்வாய் (மஹ எல) திட்டத்தின், மஹகித்துலா மற்றும் மஹகிருல நீர்த்தேக்கங்களின் கட்டுமானப் பணிகளை யாபஹுவ இருதெனியாய, கொன்கஹ சந்தியில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த நிகழ்வில் மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளவை வருமாறு –

உலகின் மிக மோசமான பயங்கரவாதத்துக்கு எதிராக நாங்கள் போராடிய போதிலும், நாட்டின் அபிவிருத்தியை ஒரு கணம் கூட நாங்கள் கைவிடவில்லை.

யுத்தத்தின் போது கூட நாங்கள் நாட்டை அபிவிருத்தி செய்தோம், கிழக்கை காப்பாற்றி இராணுவத்தை வடக்கே வழிநடத்தும் போது கிழக்கு மாகாணம் வேகமாக அபிவிருத்தி செய்யப்பட்டது. வடக்கில் யுத்தத்தை நிறைவுசெய்த அந்த போர்வீரர்கள், அபிவிருத்தி செய்யப்பட்ட மாகாணங்கள் வழியாக தெற்கிற்கு வந்தனர்.

யுத்தத்தின் போதுதான் கொழும்பு – மாத்தறை அதிவேகநெடுஞ்சாலையை அமைக்கநடவடிக்கை எடுத்தோம். யுத்தத்தின் போதுதான் நாங்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமைக்க வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம்.

நாங்கள் யுத்தத்தை வெற்றி கொண்டதன் பின்னர், இந்தப் பணிகளை செய்ய விரும்பியிருந்தால் நாங்கள் எதையும் செய்ய முடியாது. எனவே கொவிட் தொற்றுநோய்க்கு மத்தியிலும் அபிவிருத்திகளை நிறுத்த மாட்டோம் என்று கூற வேண்டும். நோய்வாய்ப்பட்ட உலகத்தின் மத்தியில் ஆரோக்கியமான அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவதே எங்கள் நம்பிக்கை. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மீண்டும் ஊடகங்களின் மீது இருண்ட யுகக் கொடூரங்கள்?

பழைய பொருள் ஒன்று புதிய வடிவத்தில் வந்தால் அதை உவமேயப்படுத்துவதற்கு 'புதிய மொந்தையில் பழைய கள்' என்று கூறுவோம்.

அந்த வகையில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றது சர்வதேச மன்னிப்புச் சபை.

2005 நவம்பர் முதல் 2015 ஜனவரி வரை இலங்கையை ஆட்டிப் படைத்த இருண்ட யுக ஆட்சி மீண்டும் வந்திருப்பத்தை பல தடவைகள் இப்பத்தியில் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றோம். பௌத்த, சிங்கள மேலாதிக்க வெறித் திமிருடன் பேரினவாத அரசு இங்கு பேயுருக் கொண்டு வந்திருக்கின்றது என்பதையும் கடந்த இரண்டு மூன்று நாள்களாக இப்பத்தியில் சுட்டி வந்திருக்கின்றோம்.

பழைய ஆட்சி இப்படி புது வடிவம் எடுத்து வந்திருப்பதை 'புதிய ஆடையில் பழைய பிசாசு' என விமர்சித்திருக்கின்றது சர்வதேச மன்னிப்புச் சபை. ஒரு வகையில் மிகச் சரியான வார்த்தைப் பிரயோகம்தான்.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், அரசியல் எதிர்ப்பாளர்களை அடக்குவதற்கு இந்த கோட்டாபய அரசு எத்தகைய பேயுருக் கொண்டு நிற்கின்றது என்பதை சர்வதேச மன்னிப்புச் சபை தனது பிந்திய அறிக்கையில் புட்டுப்பட்டு வைத்திருக்கின்றது.

ஊடகவியலாளர்கள் – குறிப்பாக யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றமை குறித்து தொடர்ந்து குரல் எழுப்பி, அதற்கான நியாயம் கேட்டுப் போராடும் ஊடகத் தரப்பினர் – மீண்டும் இலக்கு வைக்கப்படும் ஆபத்து இருப்பதாகச் சுட்டப்படுகின்றது.

அத்தகைய ஆபத்து இருப்பதற்கான கட்டியம் கூறலாக அமைச்சரவைப் பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவின் கருத்து வெளிப்பாட்டை நாம் கொள்ள முடியும்.

அரசின் உண்மை சொரூபத்தை வெளிப்படுத்தி, அதன் அடக்குமுறை மற்றும் அத்துமீறல் அடாவடிகளை அம்பலப்படுத்தும் ஊடகவியலாளர்களை பழிவாங்குவதற்கும், தண்டித்து இம்சைப்படுத்துவதற்கும் வசதியாக – இலகுவாக அவர்களை 'பயங்கரவாதிகள்' என்றோ 'பங்கரவாதத்துக்குத் துணை போனவர்கள்' என்றோ பச்சைகுத்துவதுதான் கடந்த இருண்ட யுக ஆட்சிக் காலத்தில் பொதுப் பண்பியல்பாக இருந்தது.

அதே முறைமையை மீண்டும் அரசு கையில் எடுக்கப்போகின்றது என்பதை ஊடகத்துறை அமைச்சரின் கூற்று ருசுப்படுத்தி நிற்கின்றது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக அரசுப் படைகள் மிக மோசமாக இழைத்த யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பும் அவர்களின் ஊடகங்களுமே அதிகம் குரல் எழுப்பி வருகின்றன.

தெற்கில் இயங்கும் ஊடகங்கள் – குறிப்பாக சிங்கள, ஆங்கில ஊடகங்கள் – தமது பௌத்த, சிங்கள மக்களுடன் சேர்ந்து, பேரினவாதப் போக்கில் இயங்குகின்றன. அதனால் அவை யுத்தக் குற்றங்களோ, மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களோ, மனித உரிமை மீறல்களோ யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நிகழவேயில்லை என்ற மாதிரித்தான் படம் காட்டுகின்றன.

ஆகையினால், சிங்கள இனவெறிப் படைகளின் யுத்த கால கொடூரங்களை மீண்டும், மீண்டும் அம்பலப்படுத்தி, வெளிப்படுத்தி, சர்வதேச சமூகத்தை உசுப்பேத்தி வரும் தமிழ் ஊடகங்கள் மீதுதான் சிங்களம் கொதித்துப் போய் கோபத்துடன் நிற்கின்றது என்பது தெளிவு.

இருண்ட யுக ஆட்சி மீண்டும் இங்கு – இப்போது – தீவிரமடையும் போது, அதன் கொடூரப் பார்வை – அரூபக் கரங்கள் – தமிழ் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பக்கம் திரும்பி இலக்கு வைக்கும் என்பது எதிர்பார்க்கப்படுவதுதான்.

அதற்கான ஆயத்த நிலைப்பாட்டைத்தான் *"வடக்கில் உள்ள தமிழ் ஊடகங்கள் பயங்கரவாதிகளை நினைவு கூர்ந்தும், பயங்கரவாதிகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையிலும் செயற்படுகின்றன. பயங்கரவாதிகளின் தலைவரை வாழ்த்தும் வகையிலும் செய்தி வெளியிட்டமைக்காக வடக்கு ஊடகம் ஒன்று வழக்கை எதிர் கொண்டுள்ளது. பயங்கரவாதிகளுக்குத் துணைபோவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்"* – என்ற தமது அறிவிப்பு மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார் அமைச்சர்.

'கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்' – என்ற மாதிரி இருக்கின்றது ஊடகத்துறை அமைச்சரின் அரைகுறைத் தெளிவான இந்த அறிவிப்பு.

யாழ்ப்பாணத்தில் எந்தப் பத்திரிகையும் விடுதலைப் புலிகளின் தலைவரை வாழ்த்தி இப்போது செய்தி வெளியிடவில்லை. தலைவர் பிரபாகரனின் படத்தையும், தமக்குப் புரியாத மொழியான தமிழில் எழுதப்பட்டு வெளியான செய்தியையும் பார்த்து விட்டு ஊடக அமைச்சர் கேள்விச் செவியனாக நடந்து கொள்கின்றார். அவ்வளவுதான்.

இந்தப் போக்கு ஊடகங்களுக்கு எதிராக மீண்டும் இருண்ட யுகக் கொடூரங்கள் அரங்கேற வழி செய்யும் என்பதுதான் நம் துரதிஷ்டம்.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் அறிக்கையை ஜனாதிபதி பகிரங்கப்படுத்த வேண்டும்!

## ஞானசார தேரர் வலியுறுத்தல்



ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் உண்மைத் தன்மையை அரசாங்கம் பகிரங்கப்படுத்தும் என்று கருதியே மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்.

பொதுபல சேனா அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள் ளதாகக் குறிப்பிடப்படும் செய்தியின் உண்மை தன்மையைத் தெரிந்துகொள்ளும் உரிமை எமக்குண்டு என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையை ஜனாதிபதியிடம் மாத்திரம் சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கை பிரதமருக்கும், நாடாளுமன்றத்துக்கும் இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனால் அறிக்கை தொடர்பாக சமூகத்தின் மத்தியில் மாறுப்பட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான அறிக்கையை அறிந்துகொள்ள நாட்டுமக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளார்கள். அறிக்கையின் உண்மைத் தன்மையை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் பொறுப்பு அரச தலைவருக்கு உண்டு. பாதுகாக்கப்பட வேண்டிய இரகசிய தகவல்களைத் தவிர்த்து ஏனையவற்றை வெளிப்படுத்துவது அவசியமாகும்.

பொதுபல சேனா அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்றும் எமக்கு எதிராக விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக ஓர் ஊடகம் மாத்திரம் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளோம்.

பௌத்த உரிமையையும், நாட்டின் இறையாண்மையையும் பாதுகாக்க பொதுபல சேனா அமைப்பு தொடர்ந்து குரல் கொடுத்துள்ளது. 2010 தொடக்கம் 2019 ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் இடம் பெறும் வரை இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பாகக் கருத்துரைத்தோம். நாம் குறிப்பிட்ட கருத்தை சிங்கள அரச தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் கருத்திற் கொள்ளவில்லை. மாறாக, குறுகிய அரசியல் நோக்கத்துக்காக எம்மை இனவாதியாக விமர்சித்தார்கள். இறுதியில் ஏப்ரல் 21 தாக்கத்துடன் அனைத்து உண்மையும் வெளியானது.

பொதுபல சேனா அமைப்பைத் தடை செய்யும் முயற்சியை முறியடிக்கும் அணுகுமுறையை நன்கு அறிவோம். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுடன் இஸ்லாமிய அடிப்படைவாதம் அழிக்கப்படவில்லை. பெயர் மாற்றத்துடன் நிறுவன ரீதியில் இன்றும் அடிப்படைவாதிகள் செயற்படுகிறார்கள். இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். – என்றார்.

# போதைப்பொருள்களுடன் சந்தேக நபர்கள் கைது!



பிலியந்தல மற்றும் நுகேகொட பகுதிகளில் கொழும்பு திட்டமிட்ட குற்றத் தடுப்பு பிரிவினர் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள்களுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிலியந்தல - மடபத, பட்டுவந்தர பிரதேசத்தில் கொழும்பு திட்டமிட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் 3 கிலோ 250 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டர் சைக்கிளில் ஹெரோயினைக் கொண்டு சென்ற போதே மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பிரதேசத்தை சேர்ந்த 47 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இவர் பயணித்த மோட்டார் சைக்கிள் பொலிஸாரின் பொறுப்பில் எடுக்கப்பட்டது.

கைதானவரை நேற்று கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது நீதிவான், அவரை 7 நாள்களுக்கு தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க உத்தரவு பிறப்பித்தார்.

போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ள பிறிதொரு நபருடன் இவருக்கு தொடர்புள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை நுகேகொடை பகுதியிலும் திட்டமிட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது தலா 5 கிலோ ஹெரோயின் மற்றும் ஐஸ் ஆகிய போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

# வவுனியாவில் பட்டப்பகலில் 9 லட்சம் ரூபா கொள்ளை!

வவுனியா புளியங்குளம் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி ஒன்பது லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருகையில் –

சம்பவதினம் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு தொகைப்பணத்துடன் நபர் ஒருவர் சென்ற பொழுது அவரை புளியங்குளம் முல்லைத்தீவு பிரதான வீதியில் வழிமறித்த குழுவினர் அச்சுறுத்தி அவரிடமிருந்த 9 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபரால் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

கணிதம் I
**Maths I**

**ஞா.வருணன் (NDT.Merit)**
**கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்**

**ஐந்து மணித்தியாலம்**
**Five Hour**

### பகுதி I (A)


**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. 6 மனிதர்கள் 2 நாட்கள் வேலை செய்து குறித்த வேலையின் 1/2 பங்கை நிறைவு செய்தனர். மீதி வேலையை 4 மனிதர்கள் செய்து முடிக்க தேவையான நாட்களைக் காண்க.

02. $\lg 5 = 0.6990$ என்பதை சுட்டி வடிவில் மாற்றுக.

03. சுருக்குக. $\frac{3}{2x} - \frac{1}{6x}$


04. உருவில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப x இன் பெறுமானத்தைக் காண்க.




05. $3a^2$, $6a^2b$ எனும் இரு அட்சர கணிதக் கோவைகளின் பொது மடங்குகளில் சிறியதைக் காண்க.


06. காரணிப்படுத்துக. $X^2 - 9x + 20 = 0$

07. தரப்பட்ட வென்னுருவில் $A^1 n B$ இனை நிழற்றிக் காட்டுக.




08. தீர்க்க. $(2x-8)(3+x) = 0$


09. உருவில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப x இன் பெறுமானத்தைக் காண்க.




10. உயரம் 7cm ஆகவுள்ள திண்ம செவ்வட்ட உருளையின் வளை மேற்பரப்பு $220cm^2$ ஆயின் உருளையின் ஆரையைக் காண்க. ($\pi = \frac{22}{7}$ இனைப் பயன்படுத்துக)

11. $3x - 1 \geq 5$ எனும் சமனிலியைத் தீர்த்து தீர்வை எண் கோட்டில் குறித்துக்காட்டுக.

12. தனுசன் தனது வீட்டிலிருந்து கடைக்கு பயணம் செய்த தூர – நேர வரைபு தரப்பட்டுள்ளது.
   i) A யிலிருந்து B வரை பயணித்த கதியைக் காண்க.
   ii) பயணம் செய்த மொத்தத் தூரம் யாது?




13. முதல் உறுப்பு 1/8 ஆகவும், பொது விகிதம் 2 ஆகவும் உள்ள பெருக்கல் விருத்தியின் 8 ஆம் உறுப்பை 2 இன் வலுவாக காட்டுக.


14. தரப்பட்ட அட்டவணைக்கேற்ப ஆண்டு வருமானம் ரூ 700,000 ஐப் பெறும் ஒருவர் செலுத்த வேண்டிய வருமான வரியைக் காண்க.

| ஆண்டு வருமானம் | வரிச் சதவீதம் |
|---|---|
| முதல் ரூ 300,000 | வரி விலக்கு |
| அடுத்த ரூ 300, 000 | 3% |
| அடுத்த ரூ.300, 000 | 6% |




ஒருங்கிணைப்பு:- கே.எஸ்.ரகு


15. உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கமைய Sin x யினைக் காண்க.




16. தரப்பட்டுள்ள முக்கோணிகளில் ஒருங்கிசைவான முக்கோணச் சோடியைப் பெயரிட்டு ஒருங்கிசையும் சந்தர்ப்பத்தை எழுதுக.





17. தரப்பட்ட உருவில் ABCD சதுரமாகவும், ABE ஓர் சம பக்க முக்கோணியாகவும் இருப்பின் $C\hat{D}E$ யினைக் காண்க.




18. $\begin{bmatrix} -1 & 2 \\ 0 & 1 \end{bmatrix}\begin{bmatrix} 2 & 3 \\ -2 & 0 \end{bmatrix} = \begin{bmatrix} -6 & a \\ b & 0 \end{bmatrix}$ எனின் a,b இனது பெறுமானங்களைக் காண்க.


19. உகந்த கேத்திர கணிதச் சொற்களை பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக.
   ஒரு வட்ட வில்லினால் வட்டத்தின் .................................... மீது எதிரமைக்கப்படும் கோணம், அவ் வில்லினால் வட்டத்தின் எஞ்சிய ........................................ மீது எதிரமைக்கப்படும் கோணத்தின் இரண்டு மடங்காகும்.

20. O வை மையமாகக் கொண்ட வட்டத்தில் தரவுகளை உபயோகித்து m,n இடையிலான தொடர்பை எழுதுக.





21. (2,5), (4,6) ஆகிய புள்ளிகளினூடு செல்லும் நேர் கோட்டின் படித்திறனைக் காண்க.


22. O வினை மையமாக கொண்ட வட்டத்தில் AE= EC ஆகவும், $O\hat{A}E = 30°$ ஆகவும் இருப்பின் $A\hat{D}B$ யின் பருமனைக் காண்க.





23. உருவில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கமைய FG இன் நீளத்தைக் காண்க.




24. தரப்பட்ட உருவில் RS//QT ஆகும். $P\hat{Q}T = 60°$ எனின் x,y இன் பெறுமானங்களைக் காண்க.




25. AB,BC இலிருந்து சம தூரத்திலும் A,B இலிருந்து சம தூரத்திலும் உள்ள புள்ளி P ஐக் காண தேவையான அமைப்பை வரைக.




### பகுதி I (B)


01. பாடசாலை ஒன்றில் திங்கட்கிழமை வருகை தந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1500 ஆகும். அவர்களில் 2/5 பங்கினர் துவிச்சக்கரவண்டியிலும் மீதி மாணவர்களில் 1/6 பங்கினர் நடந்தும் பாடசாலைக்கு வருகை தந்தனர்.

1. அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.
2. தரப்பட்டுள்ள ஆள் கூற்றுத் தளத்தில் திரள் மீடிறன் வளையியை வரைந்து, அதிலிருந்து தரம் 11 மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளின் இடையத்தைக் காண்க.
3. உயர் புள்ளி பெற்ற 25% மாணவர்கள் தெரிவு செய்யப்பட மாணவன் ஒருவன் எடுக்க வேண்டிய மிகக் குறைந்த புள்ளியைக் காண்க.

## பகுதி II (A)

**ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

01.நபர் ஒருவர் A,B எனும் இரு வங்கிகளில் வைப்புச் செய்த பணத்திற்கு செலுத்தும் வட்டி தொடர்பான விவரம் கீழே தரப்பட்டுள்ளது.





குறித்த நபர் வைத்திருந்த ரூ 90,000 பணத்தை 4:5 என்ற விகிதத்தில் வங்கி A,B யில் வைப்பிலிடுகிறார்.
i) வங்கி A,B யில் வைப்பிலிட்ட தொகைகளைக் காண்க.
ii) குறித்த நபரிற்கு ஒரு வருட முடிவில் வங்கி A யினால் கிடைக்கும் வட்டித் தொகையைக் காண்க.
iii)இரண்டு வருட இறுதியில் வங்கி B யினால் கிடைக்கும் வட்டித் தொகை, வங்கி A யினால் கிடைக்கும் வட்டித் தொகையிலும் அதிகம் என காட்டுக.
iv) இரண்டு வருட முடிவில் இரு வங்கிகள் மூலமும் கிடைத்த வட்டியையும், ஆரம்ப முதலையும் சேர்த்து ஒரு கம்பனியில் பங்குகளை வாங்க வைப்புச் செய்தார் கம்பனி ஆண்டுதோறும் ஒரு பங்கிற்கு ரூ.3 பங்கு லாபத்தைச் செலுத்துகின்றது. ஓர் ஆண்டின் இறுதியில் அவருக்கு ரூ 7326 பங்கு லாப வருமானம் கிடைத்ததாயின் ஒரு பங்கின் சந்தைப் பெறுமானம் யாது?

02.ஆயிடை $-1\leqslant x\leqslant 5$ இல் இருபடிச்சார்பு $y= -x^2+4x$ இன் சில x பெறுமானங்களை ஒத்த y பெறுமானங்களை காட்டும் ஒரு பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -5 | 0 | 3 | 4 | ---- | 0 | -5 |

i) x= 3 ஆக இருக்கும் போது y இன் பெறுமானத்தைக் காண்க.
ii) நியம அச்சுத் தொகுதியையும் ஓர் உகந்த அளவிடையையும் பயன்படுத்தி மேற்குறித்த பெறுமானத்திற்கேற்ப தரப்பட்ட இருபடிச் சார்பின் வரையை ஒரு வரைபு தாளில் வரைக.
ii) வரைபின் திரும்பற் புள்ளியின் ஆள் கூறுகளை எழுதுக.
iv) தரப்பட்டுள்ள இருபடிச் சார்பை வடிவம் $y= -(x-a)^2+b$ இல் எடுத்துரைக்க. இங்கு a,b ஆகியன எண்களாகும்.
v) $y=5-(x-2)^2$ இன் திரும்பற் புள்ளியை உய்த்தறிக.

03. உருவில் காட்டப்பட்டுள்ள முக்கோணி ABC இன் அடி BC இன் நீளம் (x+3) அலகுகள், செங்குத்துயரம் (x-1) அலகுகள் ஆகும்.




i) முக்கோணி ABC யின் பரப்பளவை x சார்பில் எழுதுக.
ii) முக்கோணியின் பரப்பளவு 4 அலகுகள் எனின் x ஆனது $x^2+2x-11=0$ எனும் இருபடிச் சமன்பாட்டை திருப்திப்படுத்தும் எனக் காட்டி x ஒரேயொரு பெறுமானத்தை மாத்திரம் எடுக்கத்தக்க காரணங்களை காட்டுக.
iii) $\sqrt{3}$ இன் பெறுமானத்திற்கு 1.73 இனைப் பயன்படுத்தி அடி BC யின் பெறுமானத்தை முதலாம் தசம தானத்தில் காண்க.

04.
a) தரம் 11 இல் மொத்தமாக 140 ஆண், பெண் மாணவர்கள் உள்ளனர். அவர்களில் பெண் மாணவி ஒருவரிற்கு 3 பேனாக்கள் வீதமும், ஆண் மாணவன் ஒருவருக்கு 4 பேனாக்கள் வீதமும் வழங்கப்பட்டன. மொத்தமாக 480 பேனாக்கள் தரம் 11 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.
i) ஆண், பெண் மாணவர்களை x,y எனக் கொண்டு ஓர் ஒருங்கமை சமன்பாட்டுச் சோடியை உருவாக்குக.
ii) அதனை தீர்ப்பதன் மூலம் ஆண், பெண் மாணவர் எண்ணிக்கையை வேறு வேறாகக் காண்க.

b) சமனிலி $3(3k-4)-5\leqslant 65$ ஐத் தீர்த்து k யின் உயர் நிறையெண் பெறுமானத்தைக் காண்க.

05. 2a நீள, அகல, உயரத்தை உடைய சதுரமுகி வடிவ உலோகக் குற்றி முற்றாக உருக்கப்பட்டு உலோகம் வீணாகாதவாறு ஆரை r இனை உடைய 21 கோளங்களை செய்ய முடியுமாயின் கோள ஆரை r ஆனது $r = a\sqrt[3]{\frac{1}{11}}$ எனக் காட்டி, a = 2 ஆயின் r இன் பெறுமானத்தை முதலாம் தசம தானத்தில் காண்க.

06.பால்சாலை ஒன்றில் 100 நாட்களில் விற்பனை செய்யப்பட்ட பாலின் அளவு l இல் தரப்பட்டுள்ளது. அத்தகவல்களை கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு மீடிறன் பரம்பல் கீழே தரப்பட்டுள்ளது.

| பாலின் அளவு | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70 | 70-80 |
|---|---|---|---|---|---|---|
| நாட்கள் | 10 | 16 | 20 | 24 | 18 | 12 |

1l பாலினை விற்பதன் மூலம் ரூ 12 இலாபமாக கிடைக்குமென பால்சாலையை நடத்தும் நபர் கூறுகின்றார். அவர் இவ்வாறே விற்பதன் மூலம் அடுத்த 60 நாள்களில் கிடைக்கும் இலாபம் ரூ 36000 என எதிர்பார்க்கிறார். அவர் ஒரு நாளில் விற்கும் பாலின் இடை அளவைக் கண்டு, 60 நாட்களில் கிடைக்கும் இலாபம் ரூ 36000 இனை அண்மிக்கும் எனக் காட்டுக.




**பகுதி II (B) நாளைய காலைக்கதிர் பத்திரிகையில் வெளிவரும்.**



i) துவிச்சக்கர வண்டியில் வருகை தந்த மாணவர்கள் தவிர ஏனைய மாணவர்களின் எண்ணிக்கை மொத்த மாணவர் எண்ணிக்கையில் என்ன பின்னம் எனக் காண்க.
ii) நடந்து வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை மொத்த மாணவர் எண்ணிக்கையில் என்ன பின்னம் எனக் காண்க.
iii) துவிச்சக்கர வண்டியில், நடந்து வந்த மாணவர் தவிர ஏனைய மாணவர்கள் அனைவரும் பேரூந்தில் அல்லது முச்சக்கர வண்டியில் வருகை தருவார்களாயின் அவர்களின் எண்ணிக்கையை மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் என்ன பின்னம் எனக் காண்க.
iv) துவிச்சக்கர வண்டியில் வருகை தருவோரின் 1/5 பங்கினர் பேரூந்தில் வருவார்களாயின், முச்சக்கர வண்டியில் வருகை தருவோரின் எண்ணிக்கையைக் காண்க.


02. AEDC எனும் செவ்வக வடிவமும், ABC எனும் அரை வட்டமும் கொண்ட நிலைக்குத்தாக அமைந்த கதவு ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது.




a) i) அரை வட்டத்தின் ஆரையைக் காண்க.
ii) உருவின் சுற்றளவைக் காண்க.

b) i) உருவின் மொத்தப் பரப்பளவைக் காண்க.
ii) ACDE இன் பரப்பளவிற்கு சமனாக அமையுமாறு ஆரையும், உயரமும் ஒன்றாக அமையும் உருளை வடிவ (வட்டப் பகுதிகள் இல்லாது) அமைப்பு செய்யப்படின் அதன் உயரம் யாது?


03.கிராமம் ஒன்றில் வசிக்கும் குடும்பங்கள் செய்தியினை அறிந்து கொள்ளும் ஊடகங்கள் தொடர்பான தரவுகள் வட்ட வரைபில் காட்டப்பட்டுள்ளது.




i) வானொலி மூலம் செய்தியை அறிவோரின் கோணத்தைக் காண்க.
ii)தொலைக்காட்சி மூலம் செய்தியை 12 குடும்பங்கள் அறிந்து கொள்கின்றனர் எனின் வானொலி மூலம் செய்தியை அறியும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் காண்க.
iii)ஒரு குடும்பம் நாள் ஒன்றிற்கு பத்திரிகை கொள்வனவிற்காக ரூ.30 இனை செலவிடுகின்றது எனின் 30 நாட்கள் உள்ள மாதம் ஒன்றில் இக் கிராமத்தில் உள்ள பத்திரிகை மூலம் செய்தியை அறிந்து கொள்ளும் குடும்பங்கள் செலவு செய்யும் மொத்தப் பணம் யாது?
iv)பத்திரிகை மூலம் செய்தியினை அறியும் குடும்பத்தில் 3 குடும்பம் தொலைக்காட்சி மூலம் செய்தியை அறிய மாறியிருப்பின் தற்போது தொலைக்காட்சி மூலம் செய்தியை அறியும் குடும்பங்களின் கோணத்தின் பருமன் யாது?


04) a) 1தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்ட சதுரமுகித் தாயக் கட்டையும், 1தொடக்கம் 4 வரை இலக்கமிடப்பட்ட நான்முகி தாயக் கட்டையும் ஒன்றாக வீசப்பட்டு பெறப்படும் எண் குறிக்கப்படுகின்றது.

i) மாதிரி வெளியை நெய்யரியில் 'x' எனும் அடையாளமிட்டு குறித்துக் காட்டுக.
ii) இரு தாயக் கட்டையிலும் ஒரே எண்கள் கிடைப்பதற்கான நிகழ்ச்சி A யினை நெய்யரியில் காட்டி, அதன் நிகழ்தகவைக் காண்க.





B. ஒரு விளையாட்டுக் குழு பங்குபற்றும் அம்பெய்தல் போட்டியில் முதல் சுற்றில் வெற்றி பெற நிகழ்தகவு 1/4 ஆகும். அவர்கள் முதல் சுற்றில் வென்றால் இரண்டாம் சுற்றில் வெற்றி பெற நிகழ்தகவு 2/5 ஆகும். அவர்கள் முதல் சுற்றில் தோற்று இரண்டாம் சுற்றில் வெற்றி பெற நிகழ்தகவு 1/5 ஆகும். இத் தகவலை கொண்ட மரவரிப்படம் உருவில் காட்டப்பட்டுள்ளது.

i) மரவரிப்படத்தை பூரணப்படுத்துக.
ii) ஏதாவது ஒரு சுற்றிலாவது குழு வெற்றி பெற நிகழ்தகவு யாது?




05.கணித பாடத்தில் தரம் 11 மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் 44 தரவுகளை கொண்ட கூட்டமாக்கிய மீடிறன் பரம்பல் கீழே தரப்பட்டுள்ளது. இங்கு வகுப்பாயிடை 20 - 30 என்பது $(20\leqslant x<30)$ இனைக் குறிக்கும். ஏனைய வகுப்பாயிடைகளும் மேலே தரப்பட்டது போல அமைந்துள்ளது.

| வகுப்பாயிடை | மீடிறன் | திரள் மீடிறன் |
|---|---|---|
| 20 - 30 | 3 | 3 |
| 30 - 40 | 5 | .......... |
| 40 - 50 | 9 | 17 |
| 50 -60 | ....... | 31 |
| 60 - 70 | 8 | 39 |
| 70 - 80 | ....... | 44 |



# மியன்மாரின் வழியில் செல்லும் இலங்கை அரசு; சிறுபான்மையினர் ஒதுக்கப்பட்டால் பெரும் ஆபத்து!

## லக்ஸ்மன் கிரியெல்ல ஆரூடம்



மியன்மாரின் செயற்பாடுகளைப் பின்பற்றியே இலங்கை அரசாங்கமும் செயற்பட்டு வருகின்றது. பேரணியொன்றை முன்னிலைப்படுத்திய வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதுடன், முஸ்லிம் அரசியல் தலைவர்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்காமலும் இருக்கின்றது.

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளைச் செய்வதாகக் குறிப்பிட்டு ஆணைக்குழுவை அமைத்து தென்பகுதி அரசியல் தலைவர்களையும் அடக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் பாதிப்படைந்துள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள், அரசியல் செயற்பாடுகளை விட்டு வெளியேறுவார்களாயின் மீண்டும் பயங்கரவாத செயற்பாடுகள் உருவாகுவதற்கே அது வாய்ப்பளிக்கும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு –

முன்னால் நீதியரசர் உபாலி அபேவர்தனவின் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை ஜனாதிபதிக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த அறிக்கையில் சிலரது பிரஜாவுரிமை நீக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்நிலையில் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் என்றவகையில் அறிந்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதனால் கடந்த மாதம் 28 ஆம் திகதி அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தோம். எனினும் இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்நிலையில், அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்த வேண்டியது நாட்டின் ஜனாதிபதியின் கடமையாகும். இதேவேளை, அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தண்டனை வழங்குவது நியாயமானது என்றாலும், அதற்கான விசாரணைகள் நீதிமன்றம் ஊடாகவே இடம்பெறவேண்டும். நீதிமன்ற செயற்பாடுகளுக்கு மத்தியில் ஆணைக்குழுக்களை அமைத்து இவ்வாறான விசாரணைகளை மேற்கொள்கின்றமை சிறந்த செயற்பாடாக அமையாது.

நல்லாட்சி அரசாங்கத்திலும் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆணைக்குழு அமைத்து விசாரணைகளை நடத்துவது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது. ஆனால் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அதற்கு மறுப்பு தெரிவித்தனர். நாட்டில் நீதிமன்ற செயற்பாடுகள் காணப்படும் போது, இவ்வாறான ஆணைக்குழுக்களை அமைப்பது சிறந்ததாக அமையாது என்று அவர்கள் அதனைத் தவிர்த்தனர். ஆனால் தற்போதைய அரசாங்கம் மாறுப்பட்ட கோணத்திலேயே செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஊடாக அரசியல் உரிமைகளிலும் தலையீடு செலுத்த முயற்சிக்கின்றனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவைப் பயன்படுத்தி தென்பகுதி அரசியல் தலைவர்களை அடக்க முயற்சிக்கும் அரசாங்கம், தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைவர்களின் எண்ணங்களுக்கு செவிசாய்க்காமல் அவர்களுக்கு எதிராகச் செயற்படுவதன் மூலம் அவர்களையும் அடக்கிவைக்க முயற்சிக்கின்றது. நாடாளுமன்ற உரையாடல்களின்போது தமிழ், முஸ்லிம் உறுப்பினர்களின் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு ஆளும் தரப்பினர் இடமளிப்பதில்லை. இத்தகைய செயற்பாடுகள் காரணமாக இவர்கள் நாடாளுமன்றத்தை விட்டு வெளியில் சென்றால், பயங்கரவாதிகளுடனே இணைந்துக் கொள்வார்கள்.

ஆரம்ப காலங்களில் இருந்த அரசாங்கங்களின் செயற்பாடுகளின் காரணமாக 30 வருடகால யுத்தத்துக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை எமக்கு ஏற்பட்டிருந்தது. இந்த நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது. இதேவேளை, அரசாங்கத்தின் போக்கு மியன்மார் நாட்டின் செயற்பாடுகளைப் போன்றே அமையப் பெற்றுள்ளது.

# தடுப்பூசி ஏற்ற அச்சப்படாதீர்!

## சுதர்ஷினி 'அட்வைஸ்'

கொரோனா தொற்றைத் தடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ள அனைவரும் எந்தவித அச்சமும் இன்றி தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.



தற்பொழுது பயன்படுத்தப்படும் தடுப்பூசியால் பாதிப்பு ஏற்படுவதாக சமூக ஊடகங்களில் வெளிவரும் தகவல்களால் அச்சம் கொள்ள வேண்டாம் எனவும் அவர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்த தடுப்பூசி திட்டத்துக்கு பொது மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களுள் பெரும்பான்மையினர் இந்த தடுப்பூசியை பெற்றுக்கொண்டால்தான் கொரோனாத் தடுப்புக்கான தமது திட்டத்தை வெற்றிகொள்ள முடியும் என்றும் சிலர் இந்த திட்டத்துக்கு எதிராகத் தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் முன்னெடுக்கின்றமையை தாம் கவனத்தில் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தடுப்பூசியால் பக்கவிளைவுகள் பெருமளவில் ஏற்பட்டன எனத் தகவல்கள் இல்லை. இதுவரை 2 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றப்பட்டோர் மத்தியில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தகவல்கள் எதுவும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுவாக இவ்வாறான தடுப்பூசி ஏற்றும் போது சிறியளவிலான பக்கவிளைவு ஏற்படக்கூடும். இது வழமையான ஒன்று. மக்களுள் பெரும்பாலானோர் இந்த தடுப்பூசியை ஏற்றிக்கொண்டால்தான் இந்தத் திட்டத்தை வெற்றிக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கட்டுநாயக்கவில் 24 மணிநேரத்தில் 24 பயணிகள் விமான சேவைகள்!

கொழும்பு, ஜன. 18

நேற்று புதன்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மொத்தம் 24 பயணிகள் விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றின் மூலமாக மொத்தம் 1,477 பயணிகள் தமக்கான சேவைகளை பெற்றுக் கொண்டுள்ளனர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி இந்தக் காலக் கட்டத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய 10 விமானங்களின் மூலமாக 832 பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அவர்களில் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபி மற்றும் டுபாய் ஆகியவற்றுக்கு வேலைக்காகச் சென்ற 389 இலங்கையர்கள் இலங்கை அரசாங்கத்தின் திருப்பி அனுப்பும் திட்டத்தின் கீழ் அழைத்து வரப்பட்டவர்கள் ஆவர்.

மேலும் டுபாயிலிருந்து 97 பேரும், கட்டாரின் டோஹாவிலிருந்து 79 பேரும், சிங்கப்பூரிலிருந்து 45 பேரும் நாட்டை வந்தடைந்தவர்களில் அடங்குவர்.

நாட்டை வந்தடைந்த இவர்கள் அனைவரும் இலங்கை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை, இந்தக் காலக் கட்டத்தில் 14 விமானங்களின் மூலமாக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 645 பயணிகள் நாட்டை விட்டு புறப்பட்டும் உள்ளனர்.

# பிள்ளையானுக்கு கொவிட் தடுப்பூசி!



மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு (பிள்ளையான்) நேற்று புதன்கிழமை கொவிட் - 19 தடுப்பு ஏற்றப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மாவட்டங்களில் கொவிட் - 19 தடுப்பூசியை ஏற்ற முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து மட்டக்களப்பு வைத்திய அதிகாரி பிரிவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று இடம்பெற்றது.

இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சி. சந்திரகாந்தனும் தடுப்பூசியை பெற்றுக் கொண்டார்.

# கொலைச் சம்பவ தொடர்பு குற்றச்சாட்டு பெண் உட்பட ஐவர் சீதுவையில் கைது!

சீதுவை, ரத்தொளுவ பகுதியில் ஒரு நபரை கடத்தி, கொலை செய்த சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் உட்பட ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டவர் மாகோனாவில் வசிக்கும் 26 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பெப்ரவரி 8 ஆம் திகதி கடத்தப்பட்டார் எனவும், அவரது உடல் நிகவரெட்டிய பகுதியிலிருந்து இரண்டு நாள்களுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த கொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விரைவான விசாரணைகளில் ஆரம்பத்தில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், அவரிடம் பெற்றுக் கொண்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில் ஏனைய நான்கு ஆண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# இங்கு அரசியல் கட்சி உருவாக்க இந்தியாவுக்கு அதிகாரம் கிடையாது!

## பேராசிரியர் மடகொட அபயதிஸ்ஸ தேரரும் காட்டம்

இலங்கையில் அரசியல் கட்சிகளை உருவாக்க இந்தியாவுக்கு எந்தவோர் அதிகாரமும் இல்லை என பேராசிரியர் மடகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், இலங்கையை தனது மற்றொரு மாநிலமாக இந்தியா கருதக்கூடாதுஎன்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் ஓர் அரசியல் சக்தியை நிலைநாட்ட இந்தியா தலையிடுமாக இருந்தால் அது இந்தியாவின் வெட்கமற்ற தன்மையைக் காட்டும் என்றும் பேராசிரியர் மடகொட அபயதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டார்.

மேலும் கிழக்கு கொள்கலன் முனையத்துக்கு உரிமை கோர முடியாத காரணத்தால் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடுவது இந்திய அரசாங்கத்திற்குள் இருக்கும் விரக்தியையும் ஊழலையும் காட்டுகிறது என்றும் அவர் கூறினார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை



# புதிய ஆடையில் பழைய பிசாசு: மீண்டும் அச்சத்திற்குள் இலங்கை

'புதிய ஆடையில் உள்ள பழைய பிசாசு: அச்சத்திற்கு மீண்டும் திரும்பிய இலங்கை' என்ற தலைப்பில் இலங்கை தொடர்பாக பிந்திய அறிக்கை ஒன்றை இன்று 18ஆம் திகதி சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் வரலாற்று ரீதியான குற்றங்களுக்கான நீதியை பெறுவதற்கான முயற்சிகளை நெரித்துத் தடுக்கும் அரசாங்கத்தின் போக்கை வன்மையாக எதிர்ப்பதோடு, அரசின் அப்போக்கு நீதி பெறுதலையும் தடைசெய்கிறது என சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

மறுப்புரைகள் (மாறுபாடான கருத்து நிலைப்பாடு) மீது இலங்கை அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதுபிக்கப்பட்ட கடும் நடவடிக்கையானது சிவில் சமூக சுதந்திரத்தை வன்மையாக கட்டுப்படுத்துகின்றது. அத்தோடு, சர்வதேச சட்டத்தின் கீழ், முரண்பாடு காலக் கட்டத்தில் நடைபெற்ற குற்றங்களுக்கான நீதியை பெறும் முயற்சிகளையும் தடை செய்கின்றது என சர்வதேச மன்னிப்புச் சபையால் இன்று வெளியிடப்பட்ட பிந்திய அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

அறிக்கை, 'புதிய ஆடையில் உள்ள பழைய பிசாசு: அச்சத்திற்கு மீண்டும் திரும்பிய இலங்கை' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.

30 வருட ஆயுதப் போராட்டத்தில் நாட்டில் நடைபெற்ற குற்றங்களுக்கு எதிராக இடைக்கால நீதி செயல்முறைகளைத் தடைசெய்யவும் அக் குற்றங்களுக்கு எதிராக குரல் கொடுப்போரை அடக்குவதற்கும் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சிகளில் மனித உரிமை அமைப்புகள், ஊடகங்கள், சட்டத்தரணிகள், அரசியல் எதிர்ப்பாளர்கள் மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அலுவலர்களை இலங்கை அரசாங்கம் எவ்வாறு இலக்கு வைத்தது என்பதை அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

'கடந்த வருடகாலத்தில், இலங்கை அரசாங்கம் நாட்டின் சிவில் பரப்பை தீவிரமாக மாற்றியமைத்துள்ளது. இது தற்போது, கருத்து வேறுபாடு/ மறுப்புரை தெரிவிக்கும் குரல்கள் நோக்கி அதிகரித்து வரும் விரோதம் மற்றும் சகிப்பற்ற தன்மையால் வரையறுக்கப்படுகின்றது.' என சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகத்தின் பணிப்பாளர் டேவிட் க்ரிஃபித் கூறினார்.

'வெறுமனே, அதிகாரிகளை அதிருப்திபடுத்தும் செயல்களில் ஈடுபடுதல் அல்லது கருத்துக்களை தெரிவித்தல் போன்ற காரணங்களால், எல்லா மட்டங்களிலும் உள்ள மக்கள் அச்சுறுத்தப்பட்டு, மிரட்டல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு மற்றும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். மறுப்புரைக்கு எதிரான பிரச்சாரத்தை இலங்கை அரசாங்கம் துண்டிக்க வேண்டும். அத்துடன், கருத்து தெரிவிக்கும் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் மற்றும் ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பிற்கான உரிமை மற்றும் ஆதாரமின்றி தன்னிச்சை தடுப்புக்காவலில் வைப்பதிலிருந்து சுதந்திரம் ஆகிய சர்வதேச சட்டத்தின் கீழுள்ள கடமைகளை மதிக்க வேண்டும்.'

மாசி மாதம் 2020 இல் ஐ.நா. மனித உரிமை சபையிலிருந்து அனுப்பப்பட்ட முரண்பாட்டுக்கால குற்றங்களுக்கான நீதி மற்றும் நல்லிணக்க செயல்முறைகளில் விலகியதிலிருந்து, நீதியை அணுகுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதுடன், நீதி மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையை உறுதிப்படுத்தும் முயற்சிகளைத் தடைசெய்யும் நோக்கத்துடன் அதிகாரிகள் செயல்படுகின்றார்கள்.

22 மாசி மாதம் வரை 23 பங்குனி மாதம் கூடும் போது, கடந்த மாதம் மனித உரிமைகளுக்காக ஐ.நா. உயர் ஆணையாளரால் வெளியிடப்பட்ட, இலங்கை மீதான பாதகமான அறிக்கையில் உள்ள பரிந்துரைப்புகளை அமுல்படுத்துமாறு சர்வதேச மன்னிப்புச் சபை ஐ.நா. மனித உரிமை சபைக்கு தெரிவிக்கின்றது.

'நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் தீவிரமான நடவடிக்கைகளால் இலங்கையில் நலிந்து வரும் மனித உரிமைகளை சர்வதேச சமூகம் புறக்கணிக்கக் கூடாது. தண்டனையிலிருந்து விலக்களிக்கும் சுழற்சித் தொடரை முடிவிற்குக் கொண்டு வந்து, இலங்கை அரசாங்கத்தை முழுமையாக பொறுப்புக்கூற வைத்திருப்பதற்கு மனித உரிமை சபை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அத்துடன், சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் புதிய நீதி முறைகளும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.' என டேவிட் க்ரிஃபித் கூறினார்.

### நீதி மற்றும் பொறுப்புக்கூறல்

மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சார்பாக பரிந்துரைப்பு செய்வதில் விசாரணையை மேற்கொள்ளுதல், ஆவணப்படுத்தல், வழக்குத்தொடுத்தல் அல்லது அறிக்கையிடுதல் போன்றவற்றில் பங்கு வகித்தோரை இலக்கு வைக்கும் செயல்வடிவத்தை சர்வதேச மன்னிப்புச் சபையின் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன. இதில், குறைந்தபட்சம் 6 தடவைகள் வழக்கறிஞர்களை இலக்குவைத்த சம்பவங்கள் அடங்கும்.

ஹெஜாஸ் ஹிஸ்புல்லா, சிறுபான்மையின உரிமைகளுக்கான பரிந்துரையாளர் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சட்டத்தரணிக்கு எதிராக இலங்கையின் கடுமையான தீவிரவாதத்தை தடுக்கும் சட்டம் உட்பட ஏனைய சட்டங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒருவித குற்றமிழைத்ததற்கான ஆதாரமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமல் இவர் 10 மாத காலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் சார்பாக அமுலாகிய சட்டத்தரணி அசலா செனவிரத்ன, சமூக ஊடகம் மற்றும் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளால், வன்முறை மற்றும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் போன்றவற்றால் அச்சுறுத்தப்பட்டார்.

சர்வதேச சட்டத்திற்கு எதிராக புரிந்த குற்றங்களுக்கான நீதியை நாடும் குற்ற விசாரணையாளர்களும் கண்காணிப்பிற்கு உள்ளாகின்றார்கள். குற்ற விசாரணையின் முன் பணியாளர் பதவியிறக்கம் செய்யப்பட்டு பின்பு ஆதாரங்களை உருவாக்கிய வழக்கின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். தற்போதும் அவர் சிறைகாவலில் உள்ளதோடு, ஆயுதப்படையினர்களால் இழைக்கப்பட்ட துஷ்பிரயோக குற்றச்சாட்டில் விசாரணைகளை முன்னெடுத்ததன் காரணமாக எதிரீட்டு நடவடிக்கையாகப் பழிவாங்கப்படுகின்றார் என்று நம்புகின்றார்.

மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களை மீறிய குற்றச் சாட்டுகள் பரவி வரும் நிலையில், யுத்தத்தின் இறுதி கட்டத்தில் தலைமையில் இருந்த இராணுவ தலைமை உறுப்பினர்களுக்கு புதிய நிர்வாகத்தின் கீழ் பதவி உயர்வு மற்றும் சிவில் வகிநிலைகள் உட்பட அதிகார வகிநிலைகள் வழங்கப்படுகின்றன. நியாயத்தை கோரும் பாதிக்கப்பட்ட மக்கள் மீது இது பயங்கரமான விளைவை கொண்டிருந்தது.

அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்டப்பூர்வமான திருத்தங்கள் ஆகியன, நீதியை பெறக்கூடிய நம்பகத்தன்மை உள்ள உள்ளூர் வழிமுறைகளை எவ்வாறு வலு குறைவடையச் செய்தது என்பதை இவ் அறிக்கை குறிப்பிடுகின்றது.

மேலும், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள், எவ்வாறு மனித உரிமை மீறல் குற்றவாளிகளுக்கான பொறுப்புக்கூறலை மாற்றியமைக்க முயற்சிக்கின்றது என்பதையும் இவ் அறிக்கை குறிப்பிடுகின்றது.

### குடியுரிமை இடம் மீதான தாக்குதல்

மறுப்புக்கூறலை தடுப்பதற்கு புதிய கருவிகளையும் செயல்முறைகளையும் அறிமுகப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் நேரத்தை வீணடிக்கவில்லை அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளுக்கு எதிராகக் கரி பூசும் பிரச்சாரத்தை அரசு நபர்கள் முன்னெடுத்த அதேவேளையில் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்திய பின் ஊடகவியலாளர்கள் மரண அச்சுறுத்தல்கள் பெற்றதோடு புலனாய்வு மற்றும் விசாரணைக்களுக்கு அழைக்கப்பட்டனர்.

மனித உரிமை அரச சார்பற்ற அமைப்புகளின் அலுவலகங்களுக்கு அரசு பாதுகாப்பு அதிகாரிகளின் வருகை கடந்த பதினான்கு மாத காலமாக அதிகரித்து வருகின்றது. அக் காலக் கட்டத்தில் அத்தகைய 18 வருகைகளை சர்வதேச மன்னிப்புச் சபை பதிவு செய்துள்ளது. வருகையின் போது, அதிகாரிகள் பதிவு விவரங்கள், ஊழியர்கள் மற்றும் நன்கொடையாளரின் வங்கி விவரங்கள் பற்றி விசாரித்தனர். சில ஊழியர்களின் தனிப்பட்ட வதிவிடத்திலும் அவ் அதிகாரிகள் வருகை தந்திருந்தனர்.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு (கு.அ.உ.ச.உ) சட்டம் உட்பட, பேச்சு சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதற்கு சட்டங்கள் தவறாக பயன்படுத்தப்படுகின்றது. முன் குறிப்பிடப்பட்ட சட்டமானது ரம்ஸி ரஸீக் அவர்களை கைதுசெய்து குற்றஞ்சாட்டப்படாத நிலையிலும் வழக்கறிஞ்சரை முறையே அணுகவிடாத நிலையிலும் ஐந்து மாத காலத்திற்கும் மேலாக தடுப்பில் வைத்திருக்க பயன்படுத்தப்பட்டது. இவர் முகப்புத்தகத்தில் கொவிட் 19 ஆல் இவர்களின் கட்டாயத் தகனத்திற்கு எதிராக கண்டனம் தெரிவித்தமைக்காக, பேனா மற்றும் விசைப்பலகையை ஆயுதமாக பயன்படுத்தி கருத்தியல் போரட்டத்திற்கு அழைப்புவிட்டார் என்ற ரீதியில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் உள்ளார்.

### பின்னணி

22 ஆம் திகதி மாசி மாதம் தொடக்கம் 23 ஆம் திகதி பங்குனி மாதம் வரை மனித உரிமை சபை தனது 46ஆவது அமர்வில் கூடும். இதன் போது, கனடா, ஜேர்மனி, மொன்டநீக்ரொ, வடக்கு மசதோனியா மற்றும் ஐக்கிய இரச்சியம் இலங்கை மீது தலைமைதாங்கும் தற்போதைய முதன்மை குழுவில் அடங்கும் நாடுகள் மனித உரிமைக்கான உயர் ஆணையாளர் அலுவலக அறிக்கையைத் பின்தொடரும் பிரகடனத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

தை மாதம் 2021ஆம் ஆண்டு சர்வதேச மன்னிப்புச் சபை தான் வெளியிட்ட இலங்கையில் உள்ள நிலைப்பாட்டின் மதிப்பீடு அறிக்கையில், மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புகளை தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

# அலி சப்ரியை பதவியிலிருந்து நீக்க தவறின் அரசே பலவீனமடையும்!

## ஞானசார தேரர் பாய்ச்சல்



கொழும்பு, ஜன. 18

நீதியமைச்சர் அலி சப்ரி நாட்டு தலைவர் அல்லர். இவர் வரையறைகளுக்குட்பட்டு செயற்பட வேண்டும். பௌத்த மத உரிமை சட்டங்களில் கை வைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய பெரும்பான்மை மக்களின் பொறுமைக்கும் எல்லை யுண்டு.

நீதியமைச்சர் அலி சப்ரியின் கருத்துக்கள் அடிப்படைவாதத்தைத் தோற்றுவிக்கும் வகையில் உள்ளன. நீதியமைச்சர் பதவியில் இருந்து இவரை நீக்க வேண்டும். இல்லாவிடின் இவராலேயே இந்த அரசாங்கம் பலவீனமடையும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பௌத்த மத கல்வி எவ்விடத்திலும் அடிப்படைவாதத்தையும், பிறமதங்களை அழிக்க வேண்டும் என்றும் போதிக்கவில்லை. பௌத்த மத கொள்கையைக் கொண்டுள்ள நாட்டில் அடிப்படைவாதம் தலைதூக்கவில்லை. இலங்கையில் பௌத்த அடிப்படைவாதம் கிடையாது. ஆனால் இஸ்லாமிய அடிப்படைவாதம் உள்ளது.

மத்ரஸா பாடசாலை, காதி நீதிமன்றம், ரியா சட்டம் ஆகியவை நாட்டுக்கு பொறுத்தமற்றவை என்பதை பல முறை குறிப்பிட்டுள்ளோம். மத்ரஷா பாடசாலை,ரியா சட்டம் ஆகியவை இஸ்லாமிய அடிப்படைவாதத்தைப் போதித்து தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற கொள்கையைச் செயற்படுத்த வேண்டுமாயின் மேலைத்தேய சட்டம், தேசவழமை சட்டம் ஆகியவற்றை நீக்க வேண்டும் என நீதியமைச்சர் அலி சப்ரியின் வாதம் தேவையற்றதாகும். பௌத்த மத உரிமைகளைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சட்டங்களில் கை வைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பௌத்த மத சட்டங்களும், பௌத்த கல்வியும் நாட்டில் பௌத்த அடிப்படைவாதத்தையும், வன்முறைகளையும் தூண்டவில்லை. ஆனால் மத்ரஸா பாடசாலை, ரியா சட்டம் ஆகியவை இஸ்லாமிய அடிப்படைவாதத்தைத் தோற்றுவிக்கின்றன. அதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. முஸ்லிம் விவாக சட்டத்தில் ஒரு தரப்பினரது உரிமை மீறப்படுகிறது. இது பொதுச் சட்டத்துக்குப் புறம்பானது.

பௌத்த மத உரிமையை பாதுகாக்கும் சட்டங்களை நீக்க பெரும்பாலான மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கவே பெரும்பான்மையின மக்கள் தனி சிங்கள அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். ஆகவே, நீதியமைச்சர் அலி சப்ரி நாட்டின் தலைவர் என்று நினைத்துக் கொண்டு கருத்துரைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நீதியமைச்சரது கருத்துக்கள் தேவையற்ற பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் வகையில் உள்ளன. ஆகவே, இவரது செயற்பாடு தொடர்பாக ஜனாதிபதி உரிய கவனம் செலுத்த வேண்டும். நீதியமைச்சர் பதவியில் இருந்து இவரை விலக்குவது சிறந்ததாகும். இல்லாவிடின் இவரால் வெகுவிரைவில் அரசாங்கம் பலவீனமடையும். - என்றார்.

# அனைத்துத் துறைகளுக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவு!

## அறிமுகப்படுத்த கோட்டா பணிப்பு



உலகளாவிய மாற்றங்களுடன் இலங்கை வேகமாக தகவமைதல் வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

அத்தோடு, கல்வித் துறைகள் எதுவானாலும் அனைத்து துறைகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணிணி அறிவை அறிமுகப்படுத்துமாறும் அனைத்து பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களிடமும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கு புதிய தொழில்நுட்பத்தைப் பற்றி குறிப்பிட்டளவு அறிவு இருக்க வேண்டும் என்றும் குறைந்த பட்சம் ஒரு கணிணியை இயக்குவதற்கான விடய அறிவு இருக்க வேண்டும் என்பது வெற்றிகரமான எதிர்காலத்தை உருவாக்க உதவும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

கல்வித் துறைகள் எதுவானாலும் அனைத்து துறைகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணிணி அறிவை அறிமுகப்படுத்துமாறு ஜனாதிபதி அனைத்து பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களிடமும் கேட்டுக் கொண்டார்.

பல்கலைக்கழகக் கல்விக்குத் தெரிவு செய்யப்படும் அனைத்து மாணவர்களும் திறமைவாய்ந்தவர்கள். அவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் நுழையும்போது அவர்கள் விரும்பும் ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுப்பதில் குறைபாடு இருந்தால், அது கல்வி முறைமையின் குறைபாடேயன்றி மாணவர்களின் குறைபாடு அல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மட்டத்தை அடைந்தவுடன் அவர்களிடமுள்ள திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகளும் வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறைகளில் அதிக கவனம் செலுத்துவது சர்வதேச அளவில் இலங்கை பல்கலைக் கழகங்களைத் தரவரிசைப்படுத்துவதில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

உயர் சாதனையாளர்களை ஈர்க்கவும் தக்கவைக்கவும் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் இடையில் போட்டித்தன்மை காணப்பட வேண்டும்.

இது பீடங்கள் அல்லது பணிக் குழாமினருடன் மட்டுப்படுத்தப்படாது, மாணவர்களுக்கும் திறந்திருக்க வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபை, துணைவேந்தர், பீடங்கள் மற்றும் பணிக்குழாமினர் தங்கள் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைத் தீர்மானிக்க, திட்டமிட மற்றும் நிர்வகிக்கத் தேவையான சுதந்திரம் இருக்க வேண்டும்.

அதேபோன்று அவர்களுக்கு தங்கள் நிறுவனங்களில் படிக்க பொருத்தமான மாணவர்களைத் தெரிவு செய்யவும் சுதந்திரம் இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டால், உலகம் வேகமாக மாறினாலும், நமது பல்கலைக்கழகங்களை உலகளவில் போட்டித்தன்மைவாய்ந்த நிறுவனங்களாக மாற்ற முடியும் என்றும், இதன் மூலம் இளைஞர் யுவதிகளுக்கு எதிர்கால முன்னேற்றத்தை வழங்கி நாட்டின் பொருளாதாரத்தையும் வலுப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

# மக்கள் சக்தி அலுவலகம் கல்முனையில் திறக்கப்பட்டது!



கல்முனை, ஜன. 18

ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் கல்முனைத்தொகுதிக்கான பிரதம அலுவலக திறப்பு விழா கடந்த (செவ்வாய்க்கிழமை) இரவு அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ். அப்துல் றஸாக்கின் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், முஜிபுர் ரஹ்மான், இம்ரான் மஹ்ரூப், ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம். ஏ.ஹசன் அலி உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது எதிர்வரும் காலங்களில் மாகாண சபைத் தேர்தல் உட்பட அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு இ.போ.ச. சாரதிக்கு கொரோனா ஊழியர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள்!

மட்டக்களப்பில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போவில் பணியாற்றும் 75 ஊழியர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை விரைவான அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த டிப்போவுடன் இணைக்கப்பட்ட சாரதியொருவர் கொரோனாத் தொற்றுக்கு சாதகமாக பரிசோதனை மேற்கொண்டதன் பின்னரே டிப்போவின் ஊழியர்கள் மற்றும் சாரதிகளுக்கு அன்டிஜன் பரிசோதனை நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பணிமனையால் சுகாதார வைத்தியதிகாரி எஸ்.கிரிசுதன் தலைமையிலான சுகாதார அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின்போது வேறு எவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லையென சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## கொடுக்காய்ப்புளி



சங்க இலக்கியத்தில் தமிழர்களின் தொன்மையான மரங்களில் ஒன்றாக கொடுக்காய்ப்புளி மரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மரத்தின் காய்கள் எளிதில் உதிரா என்பதால் 'உகா மரம்' என்ற பெயரில் குறிப்புகள் காணப்படுகின்றன. கொடுக்காய் புளி மரத்தின் கிளைகள் புறவு நிலம்போலக் காணப்படும்.

புறவு நிலம் என்பது முல்லை நிலத்தில் பயிர் செய்ய வயல் வயலாகத் தடுக்கப்பட்ட நிலம் ஆகும். மருத்துவ குணம் கொண்ட கொடுக்காய்ப்புளி மரத்தின் இலைகள், பூக்கள், காய்கள் ஆகியன மாதவிடாய் சிக்கல், நீர்க்கடுப்பு, ஆஸ்துமா போன்ற பல நோய்களுக்கு நிவாரணியாகவும் பயன்படுகிறது.

கோணற்புளி சிறுவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொடுப்பதால்இ கோடை காலத்தில் ஏற்படும் நோய்களைத் தடுக்கும் சக்தியாக விளங்கியது. நன்கு வளர்ந்து முற்றிய மரங்கள் பல்வகை மரச் சாமான்கள் செய்யயப் பயன்படும்

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# மன்னார் மீனவர் மூவரில் ஒருவர் மாலைதீவில் கரை ஒதுங்கினார்

## மற்றவர்களின் கதி தெரியவில்லை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.17

மன்னாரில் இருந்து கடந்த 30ஆம் திகதி கடற்றொழிலிற்கு புறப்பட்ட நிலையில் காணாமல் போன மூவரில் ஒருவர் மாலைதீவில் கரை ஒதுங்கியுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் தாழ்வுப் பாட்டில் இருந்து கடந்த 30 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு மீனவர்களும் மன்னாரைச் சேர்ந்த ஒரு மீனவருமாக மூவர் கடற்றொழிலுக்காக கடலிற்குள் சென்றுள்ளனர்.

இயந்திரப் பழுதின் காரணமாக அலையில் அள்ளுண்டு போன நிலையில் படகு புரண்டுள்ளது. இதன்போது அனைவரும் கடலில் வீழ்ந்ததில் ஒருவர் மட்டும் மாலைதீவுக் கரையை அடைந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு மாலைதீவில் கரை ஒதுங் கியவர் தமிழ் மொழி பேசியமையினால் தமிழ் மொழி பெயர்ப்பிற்காக அங்குள்ள ஓர் இந்திய அதிகாரியை மாலைதீவு பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர்.

மொழிபெயர்ப்பிற்குச் சென்ற அதிகாரியின் கூற்றின் பிரகாரம் படகில் கொற்வின், பாண்டியன், கண்ணன் ஆகிய மூவரும் பயணித்தபோதும் கண்ணன் மட்டுமே தப்பி மாலைதீவுக் கரையை அடைந்துள்ளார் எனத் தற்போது தெரியவந்துள்ளது. மற்றவர்களின் கதி தெரிய வரவில்லை.

# பயங்கரவாதிகளுக்குப் புத்துயிரூட்ட வடக்கின் தமிழ் ஊடகங்கள் முயற்சி!

## கோட்டா அரசு புதிய கண்டுபிடிப்பு



கொழும்பு, பெப். 17

வடக்கில் உள்ள தமிழ் ஊடகங்கள் பயங்கரவாதிகளை நினைவுகூர்ந்தும், பயங்கரவாதிகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையிலும் செயற்படுகின்றன. பயங்கரவாதிகளின் தலைவரை வாழ்த்தும் வகையில் செய்தி வெளியிட்டமைக்காக வடக்கு ஊடகம் ஒன்று வழக்கை எதிர்கொண்டுள்ளது.

பயங்கரவாதிகளுக்குத் துணைபோவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத்துக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் செயற்படும் ஊடகங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

முக்கியமாக வடக்கில் உள்ள தமிழ் ஊடகங்கள் பயங்கரவாதிகளை நினைவு கூர்ந்தும், பயங்கரவாதிகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையிலும், பயங்கர வாதிகளுக்குத்துணை போகும் அரசியல்வாதிகளினதும் கட்டுரைகளையும், செய்திகளையும் பிரசுரித்து வருகின்றன.

ஊடகங்கள் நடுநிலையுடன் செயற்பட வேண்டும். பயங்கரவாதத்துக்குத் துணைபோனால் நாட்டின் சட்டத்துக்கு அமைய அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கில் ஒரு ஊடகம் பயங்கரவாதிகளின் தலைவர் பிரபாகரனை வாழ்த்தும் வகையில் செய்தி வெளியிட்டமைக்காக நீதிமன்றில் வழக்கு விசாரணையை எதிர்கொண்டுள் ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளைப் புகழ்ந்து - அந்த அமைப்புக்கு ஆதரவாகச் செயற்படும் ஊடகங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதே வேளை நாட்டில் சில தனியார் அமைப்புக்களும் பயங்கரவாதத்துக்குத் துணை போகும் வகையில் செயற்படுகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், நாட்டின் சட்டத்தை மீறியதாக இந்த அமைப்புக்களின் செயற்பாடுகள் உள்ளன. அந்த அமைப்புக்களும் நாட்டின் சட்டத்துக்கு அமையவே செயற்பட வேண்டும் - என்றார்.

# யாழ்ப்பாணத்தின் முத்தீவுகள் இந்தியாவுக்கா? சீனாவுக்கா?

## இன்னமும் இறுதி முடிவு இல்லை என்கிறார் டலஸ்



யாழ்ப்பாணத் தீவுகளில் மின் உற்பத்தி அபிவிருத்திப் பணிகளை இந்தியாவுக்காக அல்லது சீனாவுக்காக வழங்குவது என்பது தொடர்பில் எந்தவொரு இறுதி முடிவும் அரசு எடுக்கவில்லை. இந்தியாவுக்கு வழங்கலாம் என்ற கருத்து எனது தனிப்பட்ட கருத்து.

- இவ்வாறு மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் காற்றாலை மற்றும் சூரியஒளி மூலமான மின்சார உற்பத்தித் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சீனாவின் பங்களிப்புடன் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கான அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையும் அனுமதி வழங்கியிருந்தது.

இந்தியாவுக்கு மிக நெருக்கமாகவுள்ள யாழ்ப்பாணத்தின் சப்த தீவுகளில் சீனா கால் பதிப்பதை இந்தியா விரும்பவில்லை. அதேபோன்று தமிழ்த் தேசியக் கட்சிகளும் விரும்பியிருக்கவில்லை. இராஜதந்திர மட்டங்களில் இந்த விடயம் தொடர்பில் எதிர்வினை இலங்கை அரசுக்குக் காட்டப்பட்டது.

அதன்பின்னர் இலங்கை அரசுக்கு இந்தத் திட்டத்துக்குரிய நிதியான 120 லட்சம் அமெரிக்க டொலரை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கி, திட்டத்தை முன்னெடுப்பதற்கு இந்தியா விருப்பம் தெரிவித்திருந்தது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுடன் இது தொடர்பில் பேச்சு நடத்தியிருந்தார். இந்த சந்திப்பு தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் டலஸ், இந்தியாவுக்கு இந்தத் திட்டம் வழங்கப்படும் என்றும் அதற்கான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

அவர் கூறியதற்கு அமைவாக இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பில் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் கேள்வி எழுப்பியபோது, இந்தியாவுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்தமை என்னுடைய தனிப்பட்ட கருத்து. அது அரசின் நிலைப்பாடு அல்ல. இந்த அபிவிருத்திப் பணிகளை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் இன்னமும் நாம் தீர்மானிக்கவில்லை - என்றார்.

# 2020 ஆம் வருட வாகன வரியாக வடக்கில் 38 கோடி ரூபா வசூல்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.17

வடக்கு மாகாணத்தில் தற்போது 2 லட்சத்து 33 ஆயிரத்து 144 மோட்டார் சைக்கிள் உள்ளமை 2020 ஆண்டின் வரிப் பத்திரத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு வடக்கு மாகாண மோட்டார்த் திணைக்களத்திற்கு வாகன வரியாக கிடைத்த வருமானம் 39 கோடி ரூபா கிடைத்துள்ளது. 2019 ஆம் ஆண்டு 38 கோடி இருபது லட்சம் ரூபாவே வருமானமாக கிடைத்தது.

கடந்த வருடம் கிடைத்த 39 கோடி ரூபாவும் 2 லட்சத்து 99 ஆயிரத்து 935 வாகனங்களிற்கு செலுத்தப்பட்ட வரி வருமானமாகவே கிடைத்துள்ளது.

வடக்கில் வரி செலுத்தப்பட்ட இந்த 2 லட்சத்து 99 ஆயிரத்து 935 வாகனங்களில் 2 லட்சத்து 33 ஆயிரத்து 144 மோட்டார் சைக்கிள்கள் உள்ளடங்குகின்றன. 66 ஆயிரத்து 789 ஏனைய ரக வாகனங்களாகும்.

இதேநேரம் பல தனியார் வாகனங்கள், திணைக்கள வாகனங்கள், சபை வாகனங்கள் தற்போதும் பிற மாகாணப் பதிவுகளில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 4 வருடங்களுக்குள் இலங்கையில் பால் மா இறக்குமதி நிறுத்தப்படும்



## அரசு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.17

அடுத்து வரும் நான்கு வருடங்களுக்குள் வெளிநாடுகளில் இருந்து பால்மா இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பால் உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்து, திரவப் பால் பயன்பாட்டை மக்களிடையே ஊக்குவிக்கும் நோக்கிலேயே பால்மா இறக்குமதியை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது நியூசிலாந்தில் இருந்து அதிகளவில் பால் மாவை இறக்குமதி செய்யும் நாடுகள் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கின்றது எனவும், நாளொன்றுக்கு 10 லட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பால்மா இறக்குமதி செய்யப்படுகின்றது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதனால் பால் உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்து நாட்டுப் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசு எதிர்பார்க்கின்றது எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, பயறு, கச்சான், எள்ளு உள்ளிட்ட உற்பத்தியில் ஏற்கனவே இலங்கை தன்னிறைவு அடைந்துவிட்டது எனவும், இதேபோன்று மற்றைய உணவுப்பொருள் உற்பத்தியிலும் தன்னிறைவு அடைந்ததும், அந்தப் பொருள் களின் இறக்குமதியை நிறுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது எனவும் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்தார்.

## புதிய ரக கொரோனா பரவலால்

# அவசியமற்ற பயணங்களை தவிர்க்குமாறு கொழும்பு நகர மக்களுக்கு வேண்டுகோள்!

யாழ்ப்பாணம்,பெப்.17

புதிய ரக கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கொழும்பு நகர மக்களுக்கு விசேட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி விசேட வைத்தியர் ருவான் விஜே முனி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் பரவியுள்ள புதிய ரக கொரோனா வைரஸ் கொழும்பு நகரிலும் தீவிரமாகப் பரவி வரும் நிலையிலேயே அவர் இவ்வாறாக கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனால் திருமண நிகழ்வுகள் மற்றும் களியாட்ட நிகழ்வுகளை நடத்துவதையும் மற்றும் மக்கள் அதிகளவில் நடமாடும் பகுதிகளுக்குச் செல்வதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, பொது இடங்களில் நடமாடும்போது முறையான சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறும் இல்லாவிட்டால் கொழும்பில் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்படலாம் என்றும் வைத்தியர் ருவான் விஜேமுனி மேலும் தெரிவித்துள்ளார்.

# மு.கா. உறுப்பினர்களுக்கு கசையடி வழங்கவேண்டும்!

## இம்ரான் மஹ்ருப் எம்.பி. தெரிவிப்பு

தேர்தல் காலங்களில் இஸ்லாமிய நடைமுறைகளை கூறி வாக்குகளைப் பெற்றவர்கள் அதை மீறிவிட்டு தப்ப முடியாது. எனவே முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மக்களிடம் இஸ்லாமிய தண்டனையான கசையடி வாங்கிக் கொள்ள வேண்டும் என திருகோணலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ருப் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட கல்முனை தொகுதி ஆதரவாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை) இரவு தனியார் விடுதியில் இடம்பெற்ற போது அங்கு மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், 20 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தம் இடம்பெற்று அதற்கு ஆதரவாக வாக்களித்த பின்னர் நான்கு மாதங்களின் பின்னர் மன்னிப்பு நாடகம் ஒன்று அரங்கேறுகிறது.

இங்கு ஒன்றை குறிப்பிட விரும்புகின்றேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் – அவர்கள் உண்மையான இஸ்லாமிய அரசியலை செய்பவர்களாக இருந்தால் – இஸ்லாமிய சரியாவை பின்பற்றுபவர்களாக இருந்தால் – அவர்கள் செய்த வேலைக்கு கசையடி வாங்கிக்கொண்டே ஐக்கிய மக்கள் சக்தியுடன் அரசியல் முன்னெடுப்பை செய்ய வேண்டும்.

தேர்தல் காலங்களில் குரானையும், ஹதீஸையும் காட்டி தேர்தல் செய்பவர்கள் தேர்தலின் பின்னர் இஸ்லாமிய நடைமுறைகளை பேணியா அரசியல் செய்கிறார்கள்.மக்களை போன்றே நானும் எங்களின் கட்சியுடன் மிகப்பெரும் ஆதங்கங்களுடன் இருக்கிறேன்.



கடந்த காலங்களில் எங்களின் கட்சியினர் சொந்த கட்சிக்காரர்களை வளர்ப்பதைவிட கொந்தராத்து கட்சிக்காரர்களை வளர்ப்பதையே குறியாக வைத்திருந்தனர். 2015 ஆம் ஆண்டு என்னுடைய மாவட்டத்தில் போட்டியிட்ட மு.கா வேட்பாளரை நான் தோற்கடித்தேன்.

அவரை எங்கள் கட்சிக்காரர்களே தேசியப் பட்டியல் ஆசனம் கொடுத்து எம்.பியாக்கி மாவட்ட அபிவிருத்தி குழுவுக்கு இணைத் தலைவராகவும் நியமித்தார்கள். இது போன்ற அநீதிகளை பொறுத்துக்கொள்ள முடியாமல் போனமையாலேயே புதிய பாதையை உருவாக்கினோம்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது இப்போது தான் பிறந்துள்ள குழந்தை. அது இன்னும் வளர வேண்டும். நடக்க, ஓட இன்னும் காலம் எடுக்கும். எங்களை சம்பந்தமே இல்லாத ஹம்பந்தோட்டைக்கு கட்சிப்பணிக்காக நியமித்தார்கள். மஹிந்தவின் கோட்டைக்குள் சென்று வேலை செய்ய பயந்தோம். அங்கு நிலை தலைகீழாக இருந்தது. அங்கும் மக்கள் நிறைய மாற்றங்களுடன் எங்களை வரவேற்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் நிறைய புறக்கணிப்புக்களையும், அவமானங்களையும் சந்தித்தோம். நாங்கள் முஸ்லிம்களுக்கு மட்டுமான எம்.பிக்கள் இல்லை இங்கிருக்கும் எங்களுக்கு சிங்கள மக்களும் தமிழ் மக்களும் நிறைய வாக்களித்துள்ளனர்.

அவர்களுக்கும் நாங்கள் குரல் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம். சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக பேசிய ஒரே பௌத்த சிங்கள தலைவர் என்றால் அது சஜித் பிரேமதாஸ மட்டுமே. அவர் நாடாளுமன்றத்தில் ஜனாஸா விடயம் தொடர்பில் பேசிய பின்னரே சிறுபான்மை தலைவர்களான ரவூப் ஹக்கீம் போன்றோர் வாய்திறந்தார்கள்.

கடந்த மாகாண சபை அமர்வுகளில் மதநெகுமவில் கையை உயர்த்த ஆரம்பித்த இவர்கள் இன்றும் அதையே தான் செய்கிறார்கள். இவர்களை தொடர்ந்தும் நம்ப முடியாது. எதிர்வரும் கிழக்கு மாகாண சபையில் நாங்கள் தனித்தே களமிறங்குவோம். இது தொடர்பில் கட்சியின் உயர்பீடத்திடம் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளேன். இவர்கள் செய்த காரியத்தால் பொதுஜன பெரமுன தலைவர் நாடாளுமன்றத்தில் பேசும் விடயங்களே பெறுமானம் இல்லாமல் போயுள்ளது.

இந்த அரசை இயக்குவது ஊடகங்களும், காவியுடை தரித்த பிக்குகளுமே. நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித்தை மக்களாகிய நாம் நம்ப வேண்டும். கடந்த நல்லாட்சி அரசில் வீடமைப்பு அமைச்சராக இருந்து நிறைய சிறுபான்மை மக்களுக்கு நன்மைகள் செய்திருக்கிறார். ஆனால் நல்லாட்சி அரசாங்கம் மோசமான ஒன்றாக இருந்தது. எங்களுக்கு இருந்த நல்ல பெயரையும் அந்த காலத்தில் இழந்துவிட்டோம். அந்த அரசாங்கத்தின் தலைவர் யார் என்பதை இறுதிவரை சரியாக விளங்கிக்கொள்ள முடியாமல் இருந்தது.

ஆனாலும் இந்த அரசாங்கத்தால் எதிர்வரும் காலங்களில் காதிநீதிமன்றம், மதரஸா என்பன சிக்கலில் மாட்டிக் கொள்ள போகின்றது. அவற்றை நாங்கள் சரியாக அணுகி மக்களுக்கு ஆதரவாக செயற்படுவோம். 2015 வரை தோல்வியை மட்டுமே சந்தித்த நாங்கள் இனி தலை தூக்க முடியாது என்றார்கள். அதிகாரத்தில் இருந்த மஹிந்தவை தோற்கடித்து ஆட்சியை உருவாக்கினோம். 2025 இலும் அதை சாத்தியமாக்குவோம்' என்றார்.

---

### திருகோணமலையிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

திருகோணமலை எரிபொருள் தாங்கி தொடர்பால் பல பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கான இந்தியத் தூதுவருடன் இடம்பெற்ற பேச்சு வெற்றியடைந்துள்ளது. திருகோணமலை எரிபொருள் தாங்கிகள் அனைத்தும் வெகுவிரைவில் இலங்கை வசமாகும்.

எரிபொருள் தாங்கியை இலங்கை வசமாக்க தொழிற்சங்கத்தினர், அரசியல் தரப்பினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டு ஒரு தீர்வு பொறிமுறை வகுக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பான பேச்சில் 2017ஆம் ஆண்டு எண்ணெய் தாங்கி குறித்து செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் புறம்தள்ளி புதிய அணுகுமுறையைக் கையாள்வதாக இந்தியத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பிறகு முழுமையாக பயன்பெறாதுபோன திருகோணமலை எரிபொருள் தாங்கி 2003ஆம் ஆண்டு இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

பெறுமதி மிக்க இந்தத் தேசிய வளத்தை வெகுவிரைவில் சொந்தமாக்கிக் கொள்வோம் என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுக்கொள்ள வேண்டும்.

திருகோணமலை கடல் மார்க்கத்தின் ஊடாகச் செல்லும் கப்பல்கள் இந்தியாவுடன் தொடர்புப்பட்டுள்ளன. ஆகவே, எரிபொருள் சார் வியாபாரத்தை மேம்படுத்திக்கொள்ள இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

இலங்கை ஐ.ஓ.சி. நிறுவனத்துடன் இணைந்து திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதனூடாக அதிக தேசிய வருவாயை குறுகிய காலத்தில் ஈட்டிக் கொள்ள முடியும்.

85 வருட காலத்துக்கும் அதிகமான பழமை வாய்ந்த திருகோணமலை எண்ணெய் தாங்கியை அபிவிருத்தி செய்து எதிர்கால சந்ததியினருக்கு இந்தத் தேசிய வளத்தை சிறந்த முறையில் கையளிப்போம் என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622

### இரு தரப்பினரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தூதரகம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை மீண்டும் இலங்கை வசமாக்குவது குறித்து கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தியடி தூதுவர் கோபால் பாக்லே மற்றும் இலங்கை தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடல் வெற்றியளித்துள்ளது எனவும், அதனடிப்படையில் 2017ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட கூட்டு முயற்சிக்கான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனவும், திருகோணமலை எரிபொருள் தாங்கிகள் அனைத்தும் வெகுவிரைவில் இலங்கை வசமாகும் எனவும் சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் கருத்துக்கு பதிலளித்துள்ள, இந்தியத் தூதரகம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இலங்கை மற்றும் இந்தியா, எரிபொருள் தொடர்பான கூட்டாண்மையை தங்களது ஒத்துழைப்பின் முன்னுரிமை பரிமாணங்களில் ஒன்றாக அடையாளம் கண்டுள்ளது. இலங்கையின் எரிபொருள் பாதுகாப்புக்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்ற இந்தியா உறுதிபூண்டுள்ளது.

அதற்கமைய, திருகோணமலையில் உள்ள எரிபொருள் தாங்கிகளின் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டில், இரு தரப்பும் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான ஆலோசனை மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இலங்கையுடனான ஆக்கபூர்வமான தொடர்பைத் தொடர்ந்தும் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் – என்றுள்ளது.

### திருகோணமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த 26 ஆம் திகதி அவர்கள் கடற்றொழிலுக்கு சென்றனட் என அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தற்போதுவரையில் அவர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கப் பெறவில்லை.

அவர்கள் மாரவில மற்றும் பருதெல்பொல முதலான பகுதிகளை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவ வைத்தியசாலைகளில் தடுப்பூசி ஏற்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணி மறுப்பு!

இராணுவ வைத்தியசாலையில் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதைத் தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரிக்கவுள்ளனர் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இந்த விடயம் தொடர்பில் ஊடகமொன்றுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களின் இராணுவத்தின் செயற்பாட்டை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கொவிட் 19 தடுப்பூசியை மாவட்ட ரீதியிலான சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் செலுத்துவதற்கான வசதிகள் உள்ள போதிலும், அதனை இராணுவ வைத்தியசாலையில் செலுத்துவதற்கான காரணம் என்ன? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## சுகாதார நடைமுறைகளை பின்பற்றாவிட்டால் சட்டங்கள் மேலும் கடுமையாக்கப்படும்!

### சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் எச்சரிக்கை

சுகாதார நடைமுறைகளை பின்பற்றப்படாவிட்டால் சட்டங்கள் மேலும் கடுமையாக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்றமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, அசேல குணவர்தன மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கொவிட் வைரஸிலிருந்து தங்களைக்காப்பாற்றிக்கொள்ள சுகாதாரத் துறை வழங்கிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாக அறிவுறுத்தல்களை பொதுமக்கள் பின்பற்றாவிட்டால், எதிர்காலத்தில் கடுமையான முடிவுகள் எடுக்கப்படும்.

இதேவேளை கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கையை சுகாதாரத் துறை கட்டுப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. உண்மையாக இந்த வைரஸ் தொற்றை சுகாதாரத் துறையோ அல்லது ஆயுதப்படைகளினாலோ கட்டுப்படுத்த முடியாது.

மேலும் சுகாதாரத் துறையில், 22 கோடி மக்களைப் பராமரிக்க போதுமான ஊழியர்கள் இல்லை. ஆகவே பொது மக்கள்தான் அதனை உணர்ந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

அதாவது கை கழுவுதல், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்றுமாறு தயவுசெய்து கேட்டுக்கொள்கிறோம். இல்லாவிடின் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி ஏற்படலாம். – என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# தோட்டத் தொழிலாளர் சம்பளம்: அரசியல் நாடகமே நடக்கின்றது!

## வேலுகுமார் எம்.பி. வேதனை



பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் அரசியல் நாடகமே நடைபெறுகின்றது. தொழிலாளருக்கு நியாயமான கூலியை பெற்றுக்கொடுப்பதில் எவருக்கும் அக்கறை இல்லை. என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடந்து கருத்து தெரிவித்த அவர் -

பெருந்தோட்ட தொழிலாளர்களின் கூலி விடயம் இன்று இழுபறி நிலையை அடைந்துள்ளது. இந்த விடயத்தில் ஒவ்வொரு சாராரும் ஒவ்வொரு திசையில் செயற்படுகின்றனர்.

பேச்சில் ஈடுபடும் தொழிற்சங்கங்களுக்கு தங்களைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். 'பேசுவது நாம்தான், கூலி நிர்ணய சபையில் இருப்பதும் நாம்தான், பெற்றுக்கொடுத்ததும் நாம் தான்' என்பதன் மூலம் தங்களது தொழிற்சங்க, அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வது அவர்களது முன்னுரிமை தேவையாக உள்ளது.

அரசின் முன்னுரிமை, கம்பனிகளைத் திருப்திப்படுத்துவதிலேயே உள்ளது. கம்பனிகாரர்கள், தொழிற்சங்கத்தின் பலவீனம் மற்றும் அரசால் மறைமுகமாக வழங்கப்படும் ஒத்துழைப்பை சாதகமாக்கிக்கொண்டு தங்களது கரங்களைப் பலப்படுத்துகின்றனர். தொடர்ந்தும் தங்களது பிடியில் தொழிலாளர்களை அடக்கி வைத்துக்கொள்வதிலேயே அவர்கள் அக்கறை காட்டுகின்றனர்.

ஆக மொத்தத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் அரசியல் நாடகமே நடைபெறுகின்றது. தொழிலாளருக்கு நியாயமான கூலியைப் பெற்றுக்கொடுக்கும் அக்கறை எந்தத் தரப்பிற்கும் இல்லை.

கூட்டு ஒப்பந்தமா? கூலி நிர்ணய சபையா? இறுதி கூலித்தொகை என்ன?' என்பதில் இழுபறி நிலை தொடர்ந்தால் தொழிலாளர்கள் பாரிய நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். எனவே காலம்தாழ்த்தாது முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

சுயலாப தொழிற்சங்க, அரசியல் வாதங்களை முன்னிலைப்படுத்துவதை அனைத்து தரப்பினரும் கைவிட வேண்டும். அனைத்து பெருந்தோட்ட துறையை மையப்படுத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் சக்திகள் ஒன்றிணைய வேண்டும்.

அவர்களுக்குள் உள்ள ஏட்டிக்கு போட்டியான நிலையை கைவிட வேண்டும். இவ் இழுபறி நிலைக்கு பொது உடன்பாடொன்றின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும். மாறாக நாம், ஒருவரை ஒருவர் விமர்சித்துக்கொள்ளலாம். ஆனால், இறுதியில் முழு பாதிப்பும் அப்பாவி தொழிலாளர்கள் மீதே சுமத்தப்படும். - எனத் தெரிவித்துள்ளார்.

# இலங்கை இளைஞர் சிங்கப்பூரில் தற்கொலை

இலங்கையைச் சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவர் 2020 ஆகஸ்ட் 12 ஆம் திகதி விக்டோரியா தெருவில் அமைந்துள்ள கிராண்ட் பசுபிக் ஹோட்டலின் 13 ஆவது மாடி அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார் என சிங்கப்பூரின் 'த ஸ்டார் டைம்ஸ்' கடந்த செவ்வாய்க்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த செய்தித்தாள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

நிஷாத் மணில்கா டி பொன்சேகா என்ற நபர் சிங்கப்பூர் மேலாண்மை பல்கலைக்கழகத்தில் மாணவராக உயர்கல்வி படிப்பை மேற்கொள்வதற்காக இங்கு வந்திருந்தார்.

கடந்த ஆகஸ்டில் கிராண்ட் பசிபிக் ஹோட்டலில் தங்கியிருந்தபோது, தனது அறையை விட்டு வெளியேறி தனது தனிமைப்படுத்தலை பலமுறை மீறிய பின்னர் அவர் தனது உயிரை தூக்கிட்டு மாய்த்துக் கொண்டார் என நம்பப்படுகிறது.

இந் நிலையில் பெப்ரவரி 16 அன்று டி பொன்சேகாவின் மரணம் குறித்து விசாரணை நடைபெற்றது.

விசாரணை அதிகாரி ஒருவர் மரண விசாரணை நீதிபதியான கமலா பொன்னம்பலத்திடம், தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறுகின்றமையால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகக் கவலைப்பட்டமையால் பொன்சேகா தற்கொலை செய்து கொண்டதாக வலுவாக பரிந்துரைத்தார்.

# செவ்வாய்க்கிழமை மட்டும் 11,700 பேருக்கு பி.சி.ஆர்.!

நாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை மாத்திரம் 11 ஆயிரத்து 700 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றைய நிலைவரப்படி, மூன்று படைகளின் கீழ் இயங்கும் 89 செயற்பாட்டு தனிமைப் படுத்தப்பட்ட மையங்களில் 9 ஆயிரத்து 99 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டில் இதுவரை 77 ஆயிரத்து 184 பேர் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் 70 ஆயிரத்து 429 பேர் முழுமையாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் 6 ஆயிரத்து 346 பேரே இன்னும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஷானி அபேசேகரவின் பிணை கோரிய மனு அடுத்த வாரம் பரிசீலனைக்கு!

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் உப.பொலிஸ் பரிசோதகர் சுகத் மெண்டிஸ் ஆகியோரால் பிணை திருத்த கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த திருத்தங்கள் அடங்கிய பிணை மனுவை எதிர்வரும் 23 ஆம் திகதி, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) அறிவித்துள்ளது.

முன்னாள் பிரதி பொலிஸ் மாஅதிபர் வாஸ் குணவர்தன கைது செய்யப்பட்ட வழக்கில், சாட்சியங்களை சோடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஷானி அபேசேகர உள்ளிட்ட இருவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த சந்தேகநபர்களை பிணையில் விடுதலை செய்யக்கோரி கம்பஹா மேல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்படபோதும் குறித்த மனுவை விசாரணைக்கு உட்படுத்திய நீதிமன்றம், பிணை கோரிக்கையை நிராகரித்தது.

இந்நிலையிலேயே திருத்தங்கள் அடங்கிய பிணை கோரிக்கையை மேன்முறையீட்டு நீதிமன்றில் ஷானி அபேசேகரவின் சட்டத்தரணி சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு பண விவகாரம்; வவுனியாவில் 6 பேர் கைது!

வெளிநாட்டு பணவிவகாரம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய ஆறு பேர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவை சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய சிலர் தாம் மத்திய வங்கியில் இருந்து கதைப்பதாகத் தெரிவித்தமையுடன், அவரது வங்கிக்கணக்கில் பத்தாயிரம் கோடி ரூபா பணம் அமெரிக்க நாட்டிலிருந்து வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், அதனை வெளியில் எடுப்பதற்கு உதவி செய்வதாகவும் தெரிவித்து, 7 ஆயிரத்து 500 கோடியைத் தங்களுக்குத் தருமாறும் 2 ஆயிரத்து 500 கோடியை குறித்த இளைஞருக்கு வழங்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக அந்த இளைஞரும் கடந்த வருடம் ஜூன் மாதத்திலிருந்து அந்த குழுவினருடன் இணைந்து கொழும்பில் தங்கிவந்துள்ளார்.

இதேவேளை, கொழும்பில் வைத்து அவரது வங்கிக் கணக்கில் ஒரு லட்சம் கோடி மதிப்பிலான இலங்கை ரூபா வங்கி கணக்கில் வைப்பில் இடப்பட்டுள்ளதாக அந்த குழு இளைஞரிடம் தெரிவித்துள்ளது. எனினும் பணம் எடுக்கமுடியாத நிலையில் மீண்டும் அவர் வவுனியாவிற்கு வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி இளைஞரை மீண்டும் தொடர்பு கொண்ட அந்த குழுவினர் பணத்தை மீட்பதற்காக கொழும்பு செல்கின்றனர் எனத் தெரிவித்து அவரை வாகனம் ஒன்றில் ஏற்றி அழைத்துச் சென்றுள்ளனர். அந்த இளைஞர் அவர்களுடன் செல்வதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இளைஞனின் நண்பன் வழங்கிய தகவலிற்கமைய வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரிற்கு மேற்படி விடயம் தெரியப்படுத்தப்பட்டது. பொலிஸார் அந்தக் குழுவினரை கைதுசெய்தனர்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் குறித்த இளைஞனிடம் வாக்குமூலத்தை பெற்றுள்ளமையுடன், இது தொடர்பாக மத்திய வங்கிக்கும் தெரியப்படுத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட 6 நபர்களும் கொழும்பு, அவிசாவளை, குருநாகல், மற்றும் வவுனியா போன்ற பகுதிகளை வசிப்பிடமாக கொண்டுள்ளமையுடன், அவர்கள் பயன்படுத்திய மூன்று சொகுசு வாகனங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. குறித்த இளைஞர் அவர்களுடன் செல்வதற்கு மறுப்பு தெரிவித்தமையால் அவரை கடத்திச்செல்லும் நோக்குடன் அந்த குழு வந்திருக்கலாம் என பொலிஸ் தரப்பில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவருக்கு (65 வயது) உறுப்புமாற்று சிகிச்சை செய்வதற்கு 'ஓ நெகட்டிவ்' அல்லது ஓ பொசிட்டிவ் ( O - or O + ) சிறுநீரகம் தேவைப்படுகிறது. வழங்குநர்கள் 25 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்ட ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம். மதுப்பழக்கம், புகைப்பழக்கம் இல்லாதவராகவும் நீரிழிவு போன்ற நோய்களினால் பாதிக்கப்படாதவராகவும் இருக்கவேண்டும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

011 2331 906 அல்லது 077 577 4852 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.02.2021 இல் வெளியிடப்பெற்றது.

# அரசுடன் செயற்படும் தமிழ் பிரதிநிதிகள் இனி தேர்தலில் தெரிவாக மாட்டார்கள்!

## அடித்துக் கூறுகின்றார் சாணக்கியன்

தற்போது ஒரு தேர்தல் நடந்தால் வடக்கு கிழக்கல் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் எவரும் தெரிவு செய்யப்படக் கூடிய நிலைமை இருக்காது என்றே நினைக்கின்றேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டமானது வரலாறு காணாத வெற்றியைக் கண்டது.

வடக்கு கிழக்கு முழுவதும் அதற்குக் கிடைத்த ஆதரவு என்பது தமிழ் சமூகத்தில் நீண்டகாலத்தின் பின்னர் ஏற்பட்ட எழுச்சியாகவே இருந்தது. கிழக்கில் இருந்து வடக்கை நோக்கிப் பயணித்த அந்தப் பயணத்துக்குப் பாரிய வரவேற்பு கிடைத்தமை சிறப்பானது.

உண்மையில் இந்தப் போராட்டம் வெற்றியடைந்தமைக்கு பலரின் பங்களிப்பு இருந்தது. அனைத்துப் பிரதேசங்களிலும், கிராமங்களிலும் இருந்து எமக்கு ஆதரவளித்த எமது சகோதரங்களின் உணர்வுகளை நாம் மதிக்க வேண்டும். அத்தோடு பல அரசியற் பிரமுகர்களும் பல்வேறு உதவிகளைச் செய்திருந்தார்கள்.

இந்தப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் பல விடயங்கள் இடம்பெற்றன. அதனைப் பற்றி நாங்கள் அலசி ஆராய வேண்டிய தேவையில்லை. ஏனெனில் போராட்டம் வெற்றியளித்தது என்ற செய்தி மட்டுமே எங்களுக்குத் தேவை.

நாட்டின் தெற்கிலும், சர்வதேச ரீதியில் இந்தப் போராட்டத்துக்குக் கிடைத்திருக்கும் வரவேற்பு மற்றும் விமர்சனங்களைப் பார்க்கும் போது ஒரு சில கட்சிகள், சில தனிநபர்கள் இதனைக் குழப்புவதற்காகப் பல பிரயத்தனங்களைச் செய்திருந்தார்கள். அதன் சலசலப்புகள் தான் அவையே தவிர வேறெதுவும் இல்லை.

இந்தப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டம் உலகம் பூராகவும் பார்க்க வேண்டும். எமது மக்களின் பிரச்சினைகள் உற்றுநோக்கப்பட வேண்டும் என்பதற்காகவே செய்திருந்தோம்.

ஆனால் சிலர் நான் தெரிவித்த கருத்துக்களை வைத்து சாணக்கியன் ஏமாற்றிவிட்டார் என்ற கருத்துக்களைச் சொல்லுகின்றார்கள். உண்மையில் இந்தப் போராட்டம் என்பது தமிழ் மக்களின் எழுச்சியை சர்வதேச சமூகம் அனைத்துக்கும் தெரியப்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டது. இது ஒரு தனி நிகழ்வை மையப்படுத்தி செய்ததாக யாரும் கருதுவார்களாக இருந்தால் அது தவறு.

தற்போது பலரும் பலவாறு சொல்லுகின்றார்கள். ஆனால் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் போது செயற்குழு என்ற ஒரு கட்மைப்பு உருவாக்கப்பட்டது. அந்தக் குழுவிலே பங்குபெறாதவர்கள், அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ளாதவர்கள் எல்லாம் இந்த நிகழ்வைப் பற்றிக் கருத்துச் சொல்கின்றமை மிகவும் வேடிக்கையான ஒரு விடயம்.

இந்தப் போராட்டம் தமிழ் மக்களினதும், தமிழ்பேசும் மக்களினதும் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரு




வதற்கான போராட்டமாகவே நடத்தியிருந்தோம். இதனை எவரும் திசைதிருப்பக்கூடாது.

இந்தப் போராட்டத்தில் பலர் கலந்து கொண்டனர் எனத் தெரிவித்திருந்தார்கள். ஊடக சந்திப்புகளெல்லாம் நடத்தியிருந்தார்கள். கல்முனை நீதிமன்றத்தால் எனக்கு இந்தப் போராட்டம் தொடர்பில் வழக்கிற்கான அழைப்பாணை கிடைக்கப்பெற்றது. ஆனால் ஒரு சிலருக்கு இது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் இருப்பது கேள்விக்குரிய விடயம்.

இந்தப் போராட்டத்தின் வெற்றியை மாத்திரம் கருதி நாங்கள் பல விடயங்களை அலசாமல் இருந்தாலும் கூட ஒரு சிலர் தொடர்ச்சியாக ஊடக சந்திப்புகள் நடத்தி இந்தப் போராட்டத்தைப் பற்றிய கருத்துகளைச் சொல்வதைப்பார்க்கும்போது, சில அடையாளம் இல்லாதவர்கள் தங்களின் அடையாளத்தை உருவாக்குவதற்காக இதனைப் பயன்படுத்துகின்றார்களா? என்று ஒரு சந்தேகமும் இருக்கின்றது.

ஏனெனில், உண்மையில் சட்டரீதியான சிக்கல் வரும் போது அனைவருக்கும் சேர்த்துத் தான் அது வந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஏதும் வந்ததாக நான் அறியவில்லை.

இந்தப் போராட்டத்தை வெற்றியாக முடித்தமையையிட்டு ஐந்து அல்ல ஐம்பது வழக்குகள் வந்தாலும் நான் கவலைப்பட மாட்டேன் ஏனெனில் அந்த எழுச்சி நிகழ்வு எமது தமிழினத்திற்கு மிகவும் தேவைப்பட்ட ஒரு விடயம். தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்ட ஒரு விடயம்.

ஆனால் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் ஒருசில அரசியல்வாதிகளைப் பார்த்தால் நகைச்சுவைப் படங்கள் நடிப்பது போல் சில செயற்பாடுகள் மேற்கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சிறுபிள்ளைத்தனமான அரசியற் செயற்பாடுகளை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். ஒன்றுமே செய்யாமல் இருந்து ஒரு பஸ் வண்டியை ஓட்டி விளம்பரம் தேடுவதான காட்சிகளைக் கூடக் காண்கின்றோம்.

ஒரு பாதையில் போகமுடியாவிடின், பஸ்ஸுக்குச் சாரதி இல்லாவிட்டால் புதிய சாரதியொருவரை நியமனம் செய்வதும், அந்தப் பாதையைச் சீர்செய்வதும்தான் அபிவிருத்தி என்று சொல்லி மக்களிடம் வாக்குக் கேட்டவர்கள் செய்ய வேண்டும். அதைவிடுத்து ஊடகங்களில் நகைச்சுவைப் படங்கள் நடிப்பதை அவர்கள் தவிர்க்க வேண்டும்.

நீர்ப்பாசன விடயங்கள் சம்பந்தமாக இராஜாங்க அமைச்சரொருவர் வந்தார் எனக் கேள்விப்பட்டேன். உண்மையில் அங்கு தீர்மானிக்கப்பட்ட திட்டங்கள் ஏற்கனவே தயாரித்து முடிக்கப்பட்ட திட்டங்கள்.

முதலாவது நாடாளுமன்ற அமர்வின் பின்னர் நான் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவைச் சந்தித்து எமது மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசத்தில் குறையில் காணப்படுகின்ற நீர்வழங்கல் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுகையில் ஒரு மாத காலத்திற்குள் திட்டங்களைத் தயாரித்து வழங்குவதாக தெரிவித்து, அதையும் அவர் தந்திருந்தார்.

அந்த நேரம் நமது அபிவிருத்திக் குழுத் தலைவர் சிறையிலே இருந்தார். அவர் அறிய வாய்ப்பும் இருந்திருக்காது. எனவே அவையெல்லாம் முடிந்த விடயங்கள். அவ்வாறான முடிந்த விடயங்களைக் கையில் எடுத்து ஓர் இராஜாங்க அமைச்சரைக் கொண்டு வந்து கூட்டம் நடத்துவதென்பது மக்களை ஏமாற்றுகின்ற ஒரு விடயம்.

இதை விடுத்து புதிய நீர்வழங்கள் திட்ங்கள், புதிய தண்ணீர்த் தாங்கி நிறுவும் திட்டங்கள், புதிய வீதிகள் நிர்மானித்தல், புதிய பஸ்கள் இறக்குமதி போன்ற செயற்பாடுகளைச் செய்து, அதற்காக நிகழ்வுகளை நடத்துவது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்கள்.

அதேபோன்று சப்ரிகம என்ற திட்டம், கடந்த கம்பெரலிய திட்டம் என்பவை பாரிய அபிவிருத்தித் திட்டமாகும். அதில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 60 கோடி ரூபாய்களுக்கு மேல் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால் தற்போதைய சப்ரிகம திட்டத்தில் கம்பெரலியவில் 10 வீதம் கூட ஆளுந்தரப்பில் உள்ளவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆனால் அவர்கள் அபிவிருத்தி செய்வோம் என்று மக்களிடம் வாக்குக் கேட்டு வந்தார்கள். இருந்தாலும், இவர்கள் விளம்பரம் தேடும் ஒரேயொரு விடயத்தை மாத்திரம் நன்றாகச் செய்கின்றார்கள்.

நாங்கள் இன்று மக்களுக்காகப் போராடி வழக்குகளுக்கான அழைப்பாணைகளைச் சேர்த்துக் கொண்டிருக்கும்போது ஒரு சிலர் நகைச்சுவைப் படங்களை நடித்து விளம்பரம் தேடுவது மிகவும் வேடிக்கையான ஒரு விடயம்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்தினூடாக அரசியல் என்பதை விட தமிழ் பேசும் மக்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றோம். இதுதான் முக்கியமான விடயம்.

இதன்போது மலையக மக்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் மற்றும் முஸ்லீம் மக்களின் ஜனாசா எரிப்பு விடயங்கள் தொடர்பில் நாங்கள் கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம் வடக்கு கிழக்கிலே தேசியம் சார்ந்த நாங்கள் எங்கள் வாக்கு வங்கியை அதிகரிக்க முடியாது.

இது நாங்கள் ஒன்றுபட வேண்டிய ஒரு காலம். இதனை விரும்பாதவர்கள் தான் மிகவும் கேவலமான செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள், கருத்துகளை முன்வைக்கிறார்கள்.

மக்களிடம் எழுச்சி ஒன்று ஏற்பட்டால் தங்களுடைய பொய்கள் அடங்கிப் போகும், அரச கைக்கூலிகளின் வாக்கு வங்கிகளில் சரிவு ஏற்படும் என்ற அச்சமே அவர்களை இவ்வாறு சொல்ல வைக்கின்றது.

இதனை இலக்காகக் கொண்டு நாங்கள் செயற்படவில்லை. ஆனால், தற்போது ஒரு தேர்தல் நடந்தால் வடக்கு கிழக்கிலே அரசோடு இருக்கின்ற எவரும் தெரிவு செய்யப்படக் கூடிய நிலைமை இருக்காது என்றே நினைக்கின்றேன்.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பாக்.பிரதமரின் நாடாளுமன்ற உரை கடைசி நேரத்தில் இரத்தாகியது!

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் நாடாளுமன்ற உரை இறுதி நேரத்தில் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை வருகின்றார்.

இந்த விஜயம் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களை சந்தித்து பாக்கிஸ்தான் பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

மேலும் 24 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறும் வர்த்தக மற்றும் முதலீட்டு மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளமையுடன் நாடாளுமன்ற விஜயம் மற்றும் விளையாட்டு மையம் திறப்பு ஆகிய நிகழ்வுகளில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கலந்துக்கொள்வார் என தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது. பாகிஸ்தான் பிரதமரின் விஜயம் 22 ஆம் திகதி இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 23 ஆம் திகதியே இடம்பெறுவதாக குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் உயர்ஸ்தாணிகராலயம் ஊடாக இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது குறித்து கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையில் பாகிஸ்தான் பிரதமரின் நாடாளுமன்ற உரை இடம்பெறாது என நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ான் விஜேதுங்க தெரிவித்தார்.

பாகிஸ்தான் பிரதமரின் விஜயம் மற்றும் அவரது நாடாளுமன்ற உரை தொடர்பிலும் கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன் போது நாடாமன்றத்தில் உரை நிகழ்த்துவதற்கு வாய்ப்பளிக்க இணக்கப்பாடு எட்டப்பட்ட போதிலும் இறுதி தீர்மானத்தை எடுக்கும் நோக்கில் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன் போதே பாக். பிரதமருக்கு 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான வாய்ப்பை அளிக்க முடியும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்த போதிலும் இறுதி தீர்மானம் எடுக்கப்பட வில்லை.

மேலும் தேநீர் விருந்துபசாரம் , பன்னாட்டு இராஜதந்திரிகள் அழைப்பு மற்றும் சுகாதார விதிமுறைகள் உள்ளிட்ட விடயங்கள் சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது.

பொதுவாகவே இலங்கை வரும் பன்னாட்டு தலைவர்களும் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதில்லை.

ஆனால் விசேடமாக கோரிக்கை விடும் பட்சத்தில் இராஜதந்திர சம்பிரதாயங்களுக்கமைவாக உரையாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

இவ்வாறானதொரு இராஜதந்திர சம்பிரதாயங்களுக்கமையவே இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்திருந்த போது நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தியிருந்தார். எவ்வாறாயினும் பாக். பிரதமரின் நாடாளுமன்ற உரை இறுதி நேரத்தில் கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.